புதினம்
சுவையான செய்திக் கிழமை இதழ்...
வரதா வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 1-4-62 | ஞாயிறு | இதழ் 42

'புதினம்' கருத்து

# எங்கள் சுதந்திரம் எங்கே?

'மனிதன் உயிர் வாழ்வதற்குக் காற்று அவசியமா?'

'காற்று இல்லாவிட்டால் சில நிமிஷங்களுக்கு உயிர் வாழ்வதே முடியாது'

'உயிர்வாழ்வதற்கு தண்ணீரும் உணவும் அவசியமா?'

'அவசியந்தான்! தண்ணீரும் உணவும் இல்லாவிட்டால் சில நாட்களுக்குக்கூட வாழமுடியாதே!'

'மனிதன் வாழ்வதற்குச் சுதந்திரமும் அவசியமா?'

'சுதந்திரமா, அதை யாருக்கு வேண்டும்? காற்றும், தண்ணீரும், சாப்பாடும் கிடைக்குமானல், யாருடைய காலடியில் வேண்டுமானலும் விழுந்துகிடக்கிறேன்' என்று சொல்கிருன் ஒரு மனிதன்.

'காற்றும், தண்ணீரும் உணவும் கிடைத்தும் என்ன பயன்? சுதந்திரம் இல்லாத வாழ்வும் ஒரு வாழ்வா?'' என்கிருன் இன்னெருவன்.

சுதந்திரத்தின் விலைதெரியாத முதல்மனிதன் மாண்டுவிட்டான். அவனுடைய காலம் போய்விட்டது.

இன்று காலம் மாறிவிட்டது. ஒவ்வொரு மனிதனுக்கும் சுதந்திரம் அத்தியாவசிய தேவையாக இருக்கிறது!

ஆனல்—

சுதந்திரம் என்றுல் என்ன?

'அந்நிய தேசத்தவர் ஆட்சியினின்றும் எங்களை விடுவித்துக் கொள்வதே சுதந்திரம்' என்ற பாடம் ஒரு காலத்தில் இருந்தது.

அந்தக் காலமும் இப்போது போய்விட்டது.

சுதந்திரம் என்றுல் என்ன?

ஒரு மனிதன் தன்னுடைய கருத்துகளை—சில கட்டுப்பாடுகளுக்குள் அமைந்து — வாய்விட்டுச் சொல்லவும் எழுதவும் முதலாவது சுதந்திரம் தேவை.

எங்களுடைய அந்தச் சுதந்திரம் எங்கே?

வாய்மூடிக் கிடக்கிறதே!

கைகட்டிக்கிடக்கிறதே!



சிங்கப்பூரின் கதாநாயகன் [3-ம் பக்கம்]



'ஈழகேசரி'பொன்னையா [4-ம்பக்கம்]

## ஈச்மனின் அப்பீல் ஐ. நா. சபை செல்லும்?

லட்சக்கணக்கான யூதர்களைக் கொலை செய்ததாகக் குற்றம்சாட்டி மரணதண்டனை விதிக்கப்பட்ட அடல்ப் ஈச்மனின் அப்பீல் விசாரணை ஜெருசலத்தில் சென்ற 22-3-62-ல் ஆரம்பமாகிவிட்டது. ஜெர்மனியிலுள்ள ஒரு முறையான கோட்டில் அப்பீல் விசாரிக்கப்பட வேண்டுமென்றும் இல்லையேல் ஐ. நா. மனிதஉரிமைச் சபை மூலம் ஈச்மன் விமோசனம் தேடப்போவதாகவும் அவனது வழக்கறிஞர் டாக்டர் ரொபேர்ட் சேர்வரியூஸ் அறிவிக்கிருர்.

"நாஜி அரசாங்கத்தின் பிரஜாஉரிமைச் சட்டத்தை அமுல் நடத்தவேண்டிய கடமை ஈச்மனுக்கு இருந்தது. அதைத்தான் அவர் அமுல் நடத்திஞரேயன்றித் தனது சொந்த விருப்பத்துக்கு எந்தக் கொலையையும் செய்தவரல்ல'' என்று ஈச்மனின் வழக்கறிஞர் விவாதிப்பார்.

ஈச்மனின் வழக்கு விசாரணையில் வெளியான—அவனுடைய படுமோசமான அட்டூழியங்களைப் பற்றித் திடுக்கிடும் தகவல்களை இந்த இதழின் 5-ம் பக்கத்தில் படியுங்கள்.

# திரை மறைவில்

## ★ 'டிரிபியூன்' பத்திரிகை:

'டிரிபியூன்' பத்திரிகை பற்றிய சில சுவையான கணக்கு வழக்குகள் என் கைவசம் சிக்கியிருக்கின்றன. இந்தப் பத்திரிகையைப் பற்றி உங்களுக்கு நன்கு தெரியும். 'வழவழாக்கறிஞர்' அமரசிங்கம் என்ற தமிழர் நடத்துகின்ற பத்திரிகைதான் இது! அரசாங்கம் என்ன வேலையைச் செய்தாலும் அதனை ஆதரித்து எழுதுவதே இந்தப் பத்திரிகையின் தொழிலாகும். அரசாங்கத்தின் 'செல்லப்பிள்ளை'யாக இருந்துவரும் இந்தப் பத்திரிகை அரசாங்கத்துக்குக் 'குல்லா'ப் போடுவதன் கரணமாகப் பெற்றுக் கொண்டுள்ள நன்மைகள் ஏராளமானவையாகும்.

### வரிப்பண விரயம்:

பொதுமக்களின் வரிப்பணத்தை விரயமாக்குவதன் முலமே இந்தப் பத்திரிகைக்கு பாலூட்டி வளர்த்து வருகிறது அரசாங்கம்!

### பத்திரிகையின் மொத்த விற்பனை:

ஏராளமான அரசாங்க விளம்பரங்கள் இந்தப் பத்திரிகைக்குக் கிடைத்து வருகின்றன. ஆனால் இந்தப் பத்திரிகையின் மொத்த விற்பனை 2500 பிரதிகள்தானும் இல்லையென்பது ஒரு பரிதாபகரமான உண்மையாகும்!

### பெற்றுக்கொண்ட விளம்பரப் பணம்.

1960, 1961-ம் ஆண்டுக் காலங்களில் நமது அரசாங்கம் இந்தப் பச்சோந்தி பத்திரிகைக்கு ரூபா 30,000 க்கு மேற்பட்ட தொகையை விளம்பரப் பணமாகக்கொடுத்துள்ளது. 1960-ம் ஆண்டில் அரசாங்க விளம்பரங்களின் பயனாக இந்தப் பத்திரிகை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொண்ட தொகை ரூபா 8,992 ஆகும். 1961-ம் ஆண்டில் பெற்றுக் கொண்டதொகை ரூபா 22, 790 ஆகும்.

### விளம்பர விகிதங்கள்:

இதில் குறிப்பிடத் தக்கதொரு விசேஷம்என்னவென்ருல் 'டிரிபியூன்' பத்திரிகையினது விளம்பர விகிதங்கள் மிகப்பிரபலமான பத்திரிகைகளான "ரைம்ஸ்" "தினமினு" "லங்காதீபா" "வீரகேசரி" போன்ற பத்திரிகைகளினது விளம்பர விகிதத்தைக் காட்டிலும் கூடுதலாக இருப்பதாகும்.

'அரசாங்கக் காசுதானே......!—சந்தர்ப்பம் கிடைத்தபோது அண்ணன் அடி' தம்பி அடி!', என்ற நிலையில்தான் விஷயங்கள் இருந்து வருகின்றன.

### இப்போதைய நிலைவரம்..!

இவ்வளவு ஊதாரித்தனமான முறையில் இந்தப் பத்திரிகையில் விளம்பரம் செய்வதற்கான காரணங்கள் எதையும் அரசாங்கம் விளக்கியிருப்பதாகத் தெரியவில்லை.

இப்போது இந்தப் பத்திரிகையில் வெளிவரும் அரசாங்க விளம்பரங்களைப் பார்த்தபோது 1962-ம் ஆண்டில் ஒருலட்சத்திற்கும் அதிகமான ரூபாவை இந்தப் பத்திரிகை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்ளும் என்றே சொல்லத் தோன்றுகிறது'

### மந்திரி இலங்கரத்தினு!

'டிரிபியூன்' பத்திரிகையில் வெளிவருகின்ற பொரும்பாலான அரசாங்க விளம்பரங்கள் திரு. ரி. பி. இலங்கரத்தினுவின் அமைச்சுக் கூடாகவே வருகின்றன. இதுபற்றிக் கொஞ்சம் சிந்தித்துப் பார்ப்பது நல்லது!

## ★ வீரசூரியா விலத்தப்படுவாரா?

'பெட்ரோலியம் கார்ப்பரேஷன்' தலைவர் பதவியிலிருந்து திரு. என். ஈ. வீரசூரியா கியூ, சியை இறக்குவதற்கான முயற்சிகள் மிகப்பலமான ஒருசில பெரிய வட்டாரங்களில் நடைபெற்று வருகின்றன.

### 'ஈயார் எஸ்ஸார்' குமாரசாமி.

இப்போது 'பெட்ரோலியம் கார்ப்பரேஷன்' உபதலைவராக இருக்கும் திருவாளர் ஈயார் எஸ் ஸார் குமாரசாமி பெருமகனுர் அந்தச் சபையின் தலைவராக திரு. வீரசூரியாவுக்குப் பதிலாக நியமிக்கப்பட்டால் ஆச்சரியப்பட்டு விடாதீர்கள்!

### 'ஈயார் எஸ்ஸா'ருக்குப்பிடித்த பாட்டு.

'ஈயார் எஸ்ஸாரு'க்குப் பிடித்தமான பாட்டு எது தெரியுமா?— "போடணும் ......குல்லா போடணும்!" என்பதுதான்!

### சிங்களத்தைத் திணிக்கமுடியாது!

இலங்கை அரை-அரசாங்க சேவையில் (Semi-Government) கடமையாற்றும் ஒரு உத்தியோகஸ்தருக்கும் அவருடைய மேல் அதிகாரிக்குமிடையில் நடந்த சம்பாசனை;

அதிகாரி: நீங்கள் சிங்களத் தகைமைப் பரீட்சை எடுக்கவில்லையா?

உத்தியோகஸ்தர்: இல்லை.

அதி: ஏன்?

உத்தி: நான் சிங்களம் படிக்கவில்லை.

அதி: அதைத்தான் ஏனென்று கேட்கிறேன்!

உத்தி: அது என்னுடைய இஷ்டம்!

அதி: அப்படியானல் உமது சம்பள உயர்வு தடைப்படுமென்பது உமக்கு தெரியுமா?

உத்தி: தெரியும். வெறும் பணத்துக்காக மட்டும் நான் வாழ விரும்பவில்லை!

அதி: ஓ!......... சரி, நீர் போகலாம்!

—அம்பலத்துறைவோன்

## கிழக்கொளிர் கதிர்போல் வந்தான்!

(உயர்திரு. விபுலானந்த அடிகளாரின் பிறந்தநாள் (27-3-1962) அந்த நந்நாளின் ஞாபகார்த்தமாக இக்கவிதை இடம்பெறுகிறது.)

இணையிலா இன்ப மூட்டும்
இசையொலி ஈடுபட்டால்!
இராவண வேந்தன் நாட்டில்
இன்னிசை யாழைக் காட்டும்
இலட்சியக் கொடியை நட்டான்
ஈழத்து இசையை மீட்டு
இமயவன் இதயம் தொட்டான்
இறந்திடாப் புகழும் பெற்ருன்

● ● ●

நால்வகைச் சேனை இன்றி
நமன்எனும் வாளும் இன்றி
யாழ்க்கொடி பறந்த மண்ணில்
யாழ்க்குரல் கலந்த பண்ணில்
வாழ்புவி மன்னன் முன்னில்
வழங்கிய இசையின் வெள்ளம்
நீள்நிலம் பரிசாய்ப் பெற்று
யாழ்நகர்ப் பேரும் இட்டான்

● ● ●

மட்டுமா நகராம் மண்ணின்
மடியினில் தவழ்ந்த செல்வன்
எட்டிடாக் கனியாம் இசைதான்
எழுப்பிடு யாழை மண்ணில்
தொட்டுமே பறிக்க எண்ணித்
தொடர்ந்திடு முயற்சி தன்னில்
கிட்டிய யாழ்நூல் தந்தே
கிழக் கொளிர் கதிர்போல்நின்ருன்

● ● ●

ஈழத்துக் கொடியில் தோன்றி
ஈடிலாப் புகழும் நாட்டி
இறைவனின் இதயம் தீண்டி
இணையிலாப் பரிசும் வேண்டி
இசையினுல் நாடும் வேண்டி
எண்ணிலா நாளும் தாண்டி
இலக்கணம் இசைக்கு வேண்டி
எழுதியே முடிக்கக் கண்டீர்

— "ஆரையூர் அமரன்"


மங்கையர் அணியும்

தங்க நகைகள்



★ அழகாகவும் ★ நாகரிகமாகவும்
★ நம்பிக்கையாகவும் வாங்குவதற்கும்
ஓடர்கள் கொடுப்பதற்கும்

பொ. அம்பலவாணர்,
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: சவரின் ஜுவலரி ஸ்ரோர்ஸ்,
114, செட்டியார் தெரு, கொழும்பு.

○ யாழ்ப்பாணத்தின் 'கசிப்பு' ○ எஸ். பொன்னுத்துரை ✳ தி. மு. க. விடம் ராஜாஜி வேண்டுகோள் ● அண்ணுவின் புது டில்லிப் பிரவேசம் ○ சைவசமயம் ஏன் சிறந்தது? ○ பெண்கள் சகிக்காதது ○ திருமணம் அவசியமா?

# கேள்வி-பதில்!

ரமணன்

க. நா. சண்முகலிங்கம்,
கொழும்பு.

கே: நீங்கள் ஏதாவது கண்டுபிடித்திருக்கிறீர்களா?

ப: ஓ...... காணுமல்போன உமது போஸ்ட் காட்டைக் கண்டுபிடித்துவிட்டேனே!

கே: மெஸ்மரிசம் என்னும் வித்தை யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?

ப: மெஸ்மர் என்னும் ஆஸ்திரிய டாக்டரால் 1776-ல் கண்டுபிடிக்கப்பட்டது. இவர் 1815-ம் ஆண்டு இறந்த பின்தான் இவரது வித்தை நாடு முழுவதும் பரவியது. இதை பரப்பியது இவரது சிஷ்யர்கள்தான்.

மு. வ. மாணிக்கவாசகர்,
வேலணை.

கே: ஏன் சைவசமயம் மற்ற சமயங்களிலும் பார்க்கச் சிறந்ததாக இருக்கிறது.

ப: நீர் சைவசமயியாக இருப்பதால் அது உமக்குச் சிறந்ததாக இருக்கிறது?

ஆர். சிவாஜிராஜ்,
மாவிட்டபுரம்

கே: மகாத்மா காந்தி வெள்ளிக்கிழமை சுடப்பட்டார். லிங்கன் வெள்ளிக்கிழமை மடிந்தார். யேசுநாதர் வெள்ளியன்று சிலுவையில் அறையப்பட்டார். இது எதைக் காட்டுகின்றது?

ப: கொலைகார முனியாண்டி வெள்ளிக்கிழமைதான் தூக்கிலிடப்பட்டான். காதலில் தோல்வியுற்ற கருணாகரன் வெள்ளியன்றுதான் பொலிடோல் குடித்தான். என்னிடம் கடன் வாங்கிக்கொண்டு கம்பிநீட்டிய கந்தையா அண்ணையும் வெள்ளிக்கிழமைதான் வாயைப் பிளந்தார். வெள்ளிக்கிழமைக்கும் பெரியார்களின் அமரநிலைக்கும் எந்தவித தொடர்புமேயில்லை.

எம். முத்துராணி, கொழும்பு6

கே: நீங்கள் கேள்வியை எழுதி பதில் கொடுக்கிறீர்கள் என நினைக்கிறேன்

ப: அடடா! இதுவும் அப்படியான ஒரு 'கப்ஸா' கேள்வியென்று இன்னொருவர் எண்ணமலிருக்க வேண்டுமே!

க. ஞா. அல்போன்ஸஸ்,
கரவெட்டி

கே: ஒருவன் கட்டாயமாகத் திருமணம்செய்து கொள்ளத்தான் வேண்டுமா?

ப: திருமணத்தின்பின்தான் மனிதன் பூரணத்துவம் பெறுகிறுன். அதோடு எந்த மனிதனும் வாழ்க்கையில் கஷ்டப்படத்தான் வேண்டும். இல்லாவிடில்சுகத்தின் அருமை தெரியாது!

கு. ராஜாராம், சுன்னுகம்

என்னை ஒரு பெண் விளக்குமாற்றால் அடித்துவிட்டாளே!

ப: வம்புக்குப் போகிறவர் வாங்கிக்கட்டாமல் இருக்க முடியுமா? எண்ணிக்கை (விளக்குமாற்றின்) கூடாமல் இனி மேலாவது நடந்துகொள்ளும்

கே: நீங்கள் ஏன் எப்பொழுதும் பெண்களையே புகழுகிறீர்கள்?

ப: விளக்குமாற்றிடமிருந்து தப்புவதற்காக. நீரும் இந்த வழியைப் பின்பற்றினால் நல்லது.

எஸ். பி. முகமதலி,
மட்டக்களப்பு

கே: தூய உள்ளம் படம் பார்த்தீர்களா?

ப: பார்த்தேன், முதலிலிருந்து முடிவுவரை நாகேஸ்வரராவ் நன்ருகத்தான் நடித்திருக்கிருர், தங்கவேலுவின் ஹாஸ்யத்துக்கும் குறைவில்லை. பாலாஜி கூட இதில் திறமையாக நடித்திருக்கிருர் இருந்தும் படம் ஏன் தோல்வியுற்றது என்பதுதான் புரியவில்லை.

கே. ராசமணி, கொழும்பு6

கே: எஸ். பொன்னுத்துரையைப்பற்றி ஓரே வார்த்தையில் கூறுங்கள் பார்க்கலாம்,

ப: அவரா? அவர் ஒரு 'தீ'

கேசன், வேலணை

கே: மனிதன் தன் தவறை எப்போது உணர்கிருன்?

ப: அதன் விளைவை அனுபவிக்கும்போது.

சண்முகலிங்கம், கொழும்பு6

கே: அகில உலக முட்டாள்கள் சங்கமொன்றை நான் ஸ்தாபிக்க எண்ணியுள்ளேன். நீங்கள் அதன் காரியதரிசிப் பதவியை ஏற்கிறீர்களா?

ப: அதனுல் உங்கள் சங்கத்தின் நோக்கம் பிழைத்துவிடும் தகுதியானவர்கள் உமது மத்தியில் நிறையப்பேர் இருப்பார்களே!

**பரிசுக் கேள்வி**

க. சுப்பிரமணியம்
"நாயகம்"
காளி கோவிலடி களபூமி
காரைநகர்.

கே: பெண்கள் எதை சகிக்க மாட்டார்கள்?

ப: அடுத்தவீட்டுக்காரி அணியும் பட்டுச் சேலையையும். வைர அட்டிகையையும் என்று பதிலளிப்பேன் என்றுதானே நினைக்கிறீர்? அதுதான் இல்லை. தன் கணவனின் அன்பு பறிபோவதைத்தான் ஒரு உத்தமப்பெண் சகிக்க மாட்டாள்'

ஐ. பாலசுப்பிரமணியம்
வேலணை

கே: கனவிலே கண்ட ராசகுமாரிக்காகக் காலமெல்லாம் சுற்றி அலையும் ராஜகுமாரனை என்ன செய்யலாம்?

ப: அங்கொடைக்கு அனுப்பிவைக்கலாம்?

மு. க. செல்வரத்தினம்,
மட்டக்களப்பு

கே: இந்தியாவில் துப்பறியும் கதைகள் எழுதும் ஜோ, ஏ. எம். தாஸ் அவர்களும் இலங்கையில் அடல்ப் ஈச்மன் கதை எழுதும் தாஸ் அவர்களும் ஒருவரா? அப்படியானுல் அவரது இந்திய விலாசம் என்ன?

ப: ஒருவரே! ஆனுல் இவர் இந்தியர் அல்ல; இலங்கையர்தான், சென்னையிலுள்ள 'மதுரநிலையம்" இவரது புத்தகங்களை வெளியிடுகிறது அவ்வளவுதான், 'புதினம்' மூகவரிக்குக் கடிதம் அனுப்பினுல் அவரது கைக்குக்கிட்டும்.

கே. ராஜ், கொழும்பு

கே: ஈழநாட்டின் பெயர்போன கைத்தொழிலான வடிசாராயம் யாழ்ப்பாணத்தில் இடைக்குமா?

ப: இலங்கையின் பிறபகுதிகளில் 'கசிப்பு" என்கிருர்கள். யாழ்பாணத்தில் வடிசாரயம்' என்கிருர்கள். அவ்வளவுதான் வித்தியாசம். இந்த விஷயம் கலால் அதிகாரிகளுக்கு மட்டுந்தான் தெரியாதென்று எண்ணியிருந்தோம் இப்பொழுதுதான் உமக்கும் தெரியாதென்ற விஷயம் புரிகிறது.

கே: உங்கள் படத்தைப் பேப்பரில் போட்டால் உங்கள் பதில்கள் சுவைக்காது என்கிறேன்.

ப: அதுமட்டுமல்ல! என் படத்தைப் பத்திரிகையில் பிரசுரித்தால் உங்களில் பலர் "இவரா ரமணன்'' என்று மூக்கில் விரல் வைக்கவும் கூடும்.

எஸ். செல்வநாதன், ஏருவூர்

கே. அன்று இமயம் முதல் குமரிவரை கொடிகட்டிய தமிழன் இன்று?

ப, கோடியிலே கொடி கட்டுவதோடு நின்றுவிட்டான்.

கே: அண்ணுவின் டில்லிப் பிரவேசத்தைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: போகவேண்டிய இடத்துக்குப் போய்விட்டார்.

எச். எம். அப்துல் ரஹீம்,
காத்தான்குடி

கே: ராஜாஜி, தி. மு. கழகத்தினரிடம் திராவிட நாடு கொள்கையை விடுங்கள் என்பது எதைஒத்திருக்கிறது.

ப: ஒரு காதலன் தன் காதலியிடம் ''கண்ணே நீ உன் உயிரைவிடு. நான் உன்னைக்கல்யாணம் செய்துகொள்கிறேன் என்பதை ஒத்திருக்கிறது.

தென் கிழக்காசியாவின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த நாடாக இன்று கருதப்படும் 'சிங்கப்பூர், ஒரு மீன்பிடிக் கிராமமாக இருந்த காலத்தில் 1819-ம் ஆண்டு-சேர் ஸ்டாம் போர்ட் ரபிள்ஸ் இங்குவந்து சேர்ந்தார்.

கிழக்கு உலகத் ஒப்பற்ற நகரமாகத் திகழும் சிங்கப்பூர் ரபிள்ஸ் வந்தபோது இருந்த நிலையை விபரிக்கிறது இந்தக் கட்டுரை.

# சிங்கப்பூர்!

## அழிவும்—ஆக்கமும்

"சிங்கப்பூரை ஒரு சொர்க்க பூமியாக மாற்றவேண்டுமானுல் அதை முதலிலிருந்து கடைசிவரை மாற்றி அமைக்க வேண்டும். இங்குள்ள மக்களுக்கு உற்சாகம், பரிசுத்தம் ஆகியவற்றை உணர்த்தவேண்டுமானுல் ஒருசில திட்டத்தை நான் அமுல் நடத்தவேண்டும். புதிய நகரங்களையும், வீதிகளையும், பெரிய தெருக்களையும் ஒழுங்குபட அமைப்பதற்காக இங்கு வசிக்கும் மக்கள் அனைவரையும் குடிபெயர்த்து மறுபடியும் குடியேற்றப் போகிறேன். பீடபூமிகளை மட்டுப்படுத்தி பள்ளத் தாக்குகளை உயர்த்தவேண்டும். மக்களுக்கு நிலம் வழங்குவதோடு அவர்களது உரிமைகளையும் மதிக்க வேண்டும். இங்குள்ளவர்கள் சமாதானமாக வாழ்வதற்குச் சட்டதிட்டங்களும், கொள்கைகளும் வகுக்கப்பட வேண்டும். இவ்வளவையும் செய்து முடித்து விட்டால் என்ருே ஒருநாள் சிங்கப்பூர் தன்நிகரற்று விளங்கும்''

சுமார் ஐநூறு பேர்மட்டும் வசித்த காலத்தில் சிங்கப்பூரில் காலடி எடுத்துவைத்த சேர் ஸ்டாம்போர்ட் ரபிள்ஸ் மேற்கண்டவாறு லண்டனுக்கு எழுதினுர்.

ரபிள்ஸ் சிங்கப்பூருக்கு வருவதற்கு முன்னும் அதற்கென்று தனியான ஒரு சரித்திரம் இருக்கத்தான் செய்தது. ஆனுல் அவை குறிப்பிட்ட சில சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு மக்களால் பேசப்பட்டு வந்ததோடு மட்டும் சரி.

அடர்த்தியாக மண்டிக் கிடந்த காடுகளால் மூடிமறைக்கப் பட்டுக்கிடந்தன 'பழைய நகரம் ஒன்று இருந்தது' என்பதை நிரூபிக்கக் கூடிய சில சின்னங்கள். ஆமாம்; இந்தப் பழைய நகர் கி. பி. 1337-ல் மிருகத்தனமாக, அழிக்கப்பட்டதுதான்,

ஆற்றின் முகத்துவாரத்தில் ஒரு பெரிய கற்பாறை ஒன்று இருந்தது. அதில் சில எழுத்துக்கள் செதுக்கப் பட்டிருந்தன. அதுவும் உடைக்கப்பட்டுச் சின்னுபின்னப் படுத்தப் பட்டிருந்தன. அங்கு சிதையாத நிலையில் இருந்த ஒரே ஒரு பொருள், இஸ்கந்தரின் கல்லறைதான். மலாயாவில் ஆட்சி நடத்திய இஸ்கந்தரின் கல்லறை தற்போதய கன்னிங் கோட்டையில் இருந்தது.

இங்கு ரபிள்ஸ் வந்தபொழுது காடு மண்டிக் கிடந்த மலைக்குன்ருகவே இப்பிரதேசமிருந்தது. மலையின் உச்சியில் கட்டப்பட்ட முதலாவது அரசாங்க மாளிகைக்குப் பாதை அமைக்க தொழிலாளர்களைத் தேடுவதே ரபிள்ஸுக்குப் பெரும் பாடாய்ப் போய்விட்டது. ஏனெனில் அச்சமயம் அங்கு வாழ்ந்த மக்களின் எண்ணிக்கை, கிழவர், சிறுவர், பெண்கள் உட்பட சுமார் ஐநூறுதான்,

மக்கள் மத்தியில் அழியாது அமரத்துவம் பெற்றிருந்தது ஒன்று—அதுதான் அந்நாட்டின் பெருமைமிக்க பெயரான 'சிங்கபுரி"

மகா அலெக்ஸாந்தரின் வாரிசான சாங்நிலா உத்தம என்பவன் ஒருசமயம் பாலம்பாங்கிலிருந்து பென்ராங் தீவுக்குப் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில் புயலில்சிக்கிய அவனது கப்பல் சிங்கப்பூர் கரையை வந்தடைந்ததாம், தனது ஆட்களுடன் கரையை வந்தடைந்த இவன் காட்டில் ஒரு அதிசயமான மிருகத்தைக் கண்டான். வெகு விரைவாகச் செல்லக்கூடிய அழகிய மிருகமாக இருந்தது அது. அதன் உடல் ரத்தச்சிவப்பாகவிருந்தது. தலை கறுப்பு. மார்பு வெள்ளை. இந்தமிருகம் ஒரு கடா ஆட்டைக் காட்டிலும் பெரிதாக இருந்தது? அந்த மிருகத்தைச் சிங்கம் என்றுகூறிய அவன், இவ்வளவு துடியானதும் பயங்கரமானதுமான மிருகம் வசிக்கும் இந்தப் பிரதேசம் ஒரு ஆட்சிபீடத்தை அமைப்பதற்கு மிகப் பொருத்தமானதாயிருக்கும்; என்று முடிவு செய்தானும் தான் தீர்மானித்தபடி ஆட்சி பீடத்தை அமைத்து விட்ட அவன் அந்நாட்டுக்கு 'சிங்கபுரி' என்றே பெயரையும் வைத்தான்.

ஆனுல் சிங்கப்பூரின் உண்மையான சரித்திரம் சேர். ஸ்டான் போர்ட் ரபின்ஸ் வருகைக்குப் பின்தான் உருவாகியது.



# 'பூதந்தேவனார்' அரங்கு

## புதுமையின் விளைவு

உலகம் எங்கும் புதுமை வரவேற்கப்படுகிறது. நன்மையோ தீமையோ புதுமை என்றவுடன் அதில் ஒரு மோகம் பிறப்பது இயற்கை. அந்தப் புதுமைகளின் விளைவு? அதைப்பற்றி யார் சிந்திக்கிறார்கள் குச்சமாமா என்ற ஹாஸ்ய எழுத்தாளர் எப்போதும் பழமைக்காக வாதாடுபவர். அவர் எழுதும் கதைகள் பழமையின் மேன்மையைப் பறைசாற்றுவதாக இருக்கும். 'போதும் போதும் பட்டண வாசம் என்ற' சிறு தொடர் கதையில் புதுமையின் விளைவு பற்றிக் குறிப்பிட்டிருப்பதை பாருங்கள்:.

''புதுமையின் விளைவு எவ்வளவு பயங்கரமானது வாய்விட்டு மனம் விட்டுச் சிரிக்கக்கூடாது. அது அநாகரிகம்; நாட்டுப்புறம்; பட்டிக்காடு. கர்நாடகம் சிரிக்க ஏதுவில்லாத இடத்திலும் மிகுந்த சந்தோஷத்தை முகத்தில் வரவழைத்துக்கொண்டு குறிப்பிட்ட அளவிற்கதிகமாகாமல் உதடுகளை அசைத்து குறிப்பிட்ட அளவோடு பற்களைச் சிறிது காட்டியும் - ஆயினும் அளவுகடந்த ஆனந்தமெய்தியிருப்பதாய் தோள்களையும் தலையையும் மட்டும் உலுக்கி நகைப்பதுபோல நடிப்பதும் நாகரிகம்—புதுமை. ஐயோ புதுமையே! பொய்மையின் உருவேயன்றோ நீ. நாலுபேருடன் சாப்பிட உட்கார்ந்தாலோ! பசி குடலை முறுக்கும். கிடைத்ததைத் தின்று வயிற்றை நிரப்ப உயிரே கெஞ்சும். ஆனால் அது இது என்று ஏதாவது அகட விகடம்பேசி இதைத் தள்ளி அதை ஒதுக்கி ஒன்றில் புளியங் கொட்டையளவை ஸ்பூனின் ஒரு நுனியில் தொத்தவெடுத்து வாயினருகில் எடுத்துச் சென்று நாக்கினால் தடவி வாயிலெடுத்துக்கொண்டு உடனே உடம்பையெல்லாம் வர்ணிக்க முடியாத ஒருவகையில் ஒடுக்கியும் நடுக்கியும் சொல்லமுடியாத ஒரு அனுபவத்தை எய்திவிட்டதாகவும் நடிக்கவேண்டும். அதுதான் நாகரிகம்! புதுமை, ஐயோ! புதுமையே! நீ வாழ்க!!

வாசித்தீர்களா? குச்சமாமா சொல்வது உண்மை, முற்றிலும் உண்மை. ஆனாலும் நான் கூட அதே புதுமை வாதிதான். என்ன செய்வது? இந்த போலி உலகில் வாழ்ந்து தீரவேண்டியிருக்கிறதே.

## முன்னுரையில் ஒரு பொறி

சமீப காலமாக ஈழத்துப் புத்தகச் சந்தையிலே பல ஈழத்து எழுத்தாளர் எழுதிய நூல்கள் நடமாடத் தொடங்கியிருக்கின்றன. சுமார் இரண்டு வருட காலத்தில் சிறுகதைகள், குறுநாவல்கள், கவிதைகள், கட்டுரை நூல்கள். பொதுப் புத்தகங்கள். சமய வெளியீடுகள், நாட்டுப் பாடலெனப் பல துறைகளிலும் குறிப்பிடத்தக்கதாக நாற்பத்தைந்து நூல்கள் வெளிவந்திருக்கின்றன. நல்ல முயற்சிதான், வரவேற்கவேண்டியது நம் கடமையுங்கூட, ஆனால் அவற்றிலே பலவற்றில் எழுதியிருக்கும் முன்னுரை, முகவுரை என்பன பொதுப்பிரச்சினைகளைக் கிண்டிக் கிளறி ஆராயஏதுவாகின்றன, செ. கணேசலிங்கனின் மூன்றாவது சிறுகதைத் தொகுதியான சங்கமம் என்ற நூலுக்கு வல்லிக்கண்ணன் எழுதியிருக்கும் முன்னுரை அப்படியான ஒரு சர்ச்சையைக் கிளப்பக்கூடியது என்பதில் ஐயமில்லை, அதில் ஒரு பொறி தெறிப்பதை உங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறேன்,

''குறுகிய நோக்கு என்ற வட்டத்துக்குள் நின்றுகொண்டு — அல்லது 'தனித்வ நோக்கு' என்று கோணல் பார்வை பார்த்துக்கொண்டு இரண்டு மூன்று பேர்தான் சிறுகதை எழுதுகிறார்கள் ஒரு டசின் பேர்வழிகளே நல்ல கதை எழுதக்கூடியவர்கள் என்று திரும்பத் திரும்பச் சொல்லும் விமர்சக வித்தகர்கள் சிறுகதை வளர்ச்சியைத் தேக்கிவிடவில்லை, தேக்கிவிடவும் முடியாது 'அப்பனைப் பாடும் வாயால் ஆண்டி சுப்பனைப் பாடுவேனோ?' என்ற மனோபாவம் இலக்கிய பக்தித் தீவிரவாதிகளிடமும் காணப்படுகிறது. 'புதுமைப் பித்தன் கதைகளையும்' லா. ச. ராமாமிர்தம் கதைகளையும் படித்து நன்றாக இருக்கின்றன என்று சொல்கிறவன் மற்றவர்கள் கதைகளையும் படித்துவிட்டு நன்றாக இருக்கிறது என்று பாராட்டத் தொடங்கினால், அதில் என்ன விவஸ்தை இருக்கமுடியும்? அதில் ஏதாவது அர்த்தம் உண்டா? என்று எண்ணுவோர் உளர். அவர்களுடைய அறிவுக்கும் ஆய்வுத் திறனுக்கும் அஞ்சலி செலுத்திவிட்டு அவர்கள் அபிப்பிராயத்தை ஒதுக்கிவிடலாம்."

எழுத்து என்ற விமர்சன பத்திரிகைக்கு இங்கிருந்து 'க்' கன்னா இல்லாமல் இலங்கை கடிதம் எழுதும் 'ரா'வன்னா போன்றார்க்கு இதை அர்ப்பணிக்கிறேன்.

## கவிதை-செய்யுள்-பாடல்

கேள்வி:- கவிதை' செய்யுள், பாடல் என்பவற்றுள் ஏதாவது வேறுபாடுகள் உண்டா? அப்படியானால் அவற்றின் தன்மைகளை விளக்கிக் கூறவேண்டுகிறேன்.

பதில்:- இவையெல்லாம் விரித்துத் தனித் தனி நூலாக எழுதவேண்டிய மிக அரிய விஷயங்கள். தாங்கள் ஆர்வத்தோடு கேட்பதால் சுருக்கிக் கூறுகிறேன். மற்றவர்களுக்குப் பயன்படச் செய்வதிலும் ஆட்சேபமில்லை.

கவிதை, செய்யுள், பாடல் மூன்றும் வெவ்வேறு அம்சமுடையவை. கள்ளையும் தியையும் சேர்த்து, காற்றையும் வானவெளியையும் சேர்த்து சிறந்த கவிஞர்கள் படைப்பதே கவிதை எனப்படும். உணர்வை மறுத்துகின்ற கற்பனை அம்சமே கவிதைக்கு 'கள்'' அந்தக் கற்பனைக்கு ஆதாரமாய் அமைந்த தணியாத தாபம் ஒன்றைச் சுமந்திருப்பதே கவிதையில் 'தீ' அந்தத் தாபத்தில் இழைந்து ஏங்கும் இசை, சொக்கலாக வடிவெடுப்பதே கவிதைக்குக் "காற்று". சொல்லில் இழைகின்ற ஏக்கமும், ஏக்கத்தில் விழைந்த கற்பனையும் கவிதையின் வடிவமாய் அமையவும், அந்த வடிவத்திற் குள்ளே வந்து கொலுவமரும் ஒரு உன்னதப்பொருளே கவிதைக்கு 'வான்' எனப்படும்.

செய்யுள் என்பது இலக்கண வரம்புகட்கு அமைய ரஸமற்ற வெறும் சொல்லடுக்குகளால் ஆக்கப்பட்ட கவிதா தேவி ஏறிவரும் பல்லக்கு எனவே செய்யுள் கவிதையாக மாட்டாது.

பாடல் என்பது இசையோடு பாடுவதற்குரியது. பாடலில் கவிதை நயம்இருக்க வேண்டுமென்பதில்லை, கவிதையையும் இசையோடு பாடலாம்.

இது எனது அபிமானி ஒருவர் அனுப்பிய கேள்வியுமல்ல. என்னுடைய பதிலுமல்ல. திருலோக சீதாராம் என்ற கவிஞர் ஈழத்தில் சொற்பொழிவுக்காக ஏழெட்டு வருடங்களுக்குமுன் வந்தபோது சுதந்திரன் பத்திரிகை நிருபர் கேட்ட கேள்வியும் விடையும் இவை. கவிதை பற்றிய பல அபிப்பிராயங்களில் இதுவுமொன்று. அவளவுதான்.

## ராதையின் வேதனை

திருலோக சீதாராம் அவர்களைப் பற்றி நினைக்கும்போது அவர் வெளியிட்ட புதுத் தமிழ்க் கவிமலர்கள் என்ற கவிதைத் தொகுப்பு நூல் ஞாபகத்திற்கு வருகிறது. அதில் பல நல்ல கவிதைகள் இடம் பெற்றிருக்கின்றன. அவற்றுள் ராதையின் வேதனை எனக்கு. நிரம்பப் பிடித்திருக்கிறது கம்சனுடைய அழைப்பின்மீது வடமதுரைக்குப் பலராமனுடன் புறப்படுகிறான் கண்ணன். அவனுடைய இரதத்தின் முன்பு வந்துநின்று வழி மறிக்கிறாள் ராதை. அவளின் உள்ளத்தைக் கவிஞர் படம் பிடித்துக் காட்டுகிறார்.

(1) மதுரா புரியின்
 மாயம் முழுதும்.
மாற்றான் வலிமை
எளிதன்றே
 சிதையா அமுதக்
கனலே வஞ்சம்
 செய்வான் பகைவன்
அறியாயோ.

(2) கருணா கரனே
கண்ணா அழியாக்
 காதல் நிதியே நீ போனால்
இருள் கூடிய புன்
 சிறையாய் விடுமே
இங்கே ஒளிவே
 றுணர்வேனோ

(3) யமுனா நதியின்
 அலைமீ துருளும்
இசையைப் பருகித்
 திமிரேறி
அமரா துலவும்
 சிறுகாற் றெனவுன்
அடியின் போக்கில்
 திரியாமல்

(4) குளிர் மார்கழியின்
 பனியால் சிறையில்
குறுகும் குயில்போல்
 குழைவேனோ
அளிமாமுகிலே
 முகில் நீங்கியபின்
ஆடும் மயில்தான்
 உளதாமோ!

(5) ஞாலத்தழகே!
 நின்கைக் குழலின்
நாதத் திரளில் கலவாத
 மாலைப் பொழுதின்
நிறைவும் பால்போல்
 வழியும் நிலவும்
வீணன்றோ!

இந்த அருமையான கவியை எழுதியவர் 'நந்தகோபாலன்' என்ற புனைபெயர் பூண்ட ரா. அய்யாசாமி. இவருடைய தனிக் கவிதைத் தொகுதியும் ஒன்று வெளியாகியிருக்கிறது.

## தமிழ்த் தொண்டர் ஈழகேசரி பொன்னையா

ஈழத்திலே தனக்கென ஓர் இடத்தை ஸ்தாபித்துக் கொண்ட ஈழகேசரிப் பத்திரிகையின் அதிபர் திரு. நா. பொன்னையா அவர்களது நினைவு நாள் 31-3-62 சனிக்கிழமை. மறுமலர்ச்சி எழுத்தாளரின் பீடமாகவும், ஈழத்துக் கவிஞர் பலரின் தொட்டிலாகவும், அரசியல் தீர்க்க தரிசிகளின் அரங்கமாகவும், அதை நிர்வகித்து நடாத்திய பொருமைக்குரியவர் அவர்: நல்ல பயனுள்ள பலநூல்களை வெளியிட்டு தமிழ்த்தொண்டு செய்த புகழ் அவருக்குண்டு. சாதாரண மனிதனாக அவர் பிறந்து, வறுமையில் வாடி, விடா முயற்சியினாலும், முன்யோசனையாலும் அசையாத நம்பிக்கையாலும், அசாத்தியத்துணிவினாலும், அவர் சாதித்த காரியங்கள் பலப்பல. அவரது நினைவு நாளைக் குரும்பசிட்டி சன்மார்க்கசபை 1-4-62 ஞாயிற்றுக்கிழமை கொண்டாட இருக்கிறது. அவர் நாமம் வாழ்வதாக!

மலச் சிக்கலுக்கும் மூல வியாதிக்கும்
ரிஷி லேகியம்
(ரிஷி கருணைக்கிழங்கு லேகியம்)

தேகமெலிவு, கண்,கை, கால், திரேக எரிச்சல், பற்றுக்கள், நெஞ்சுவலி, இடுப்புவலி. வயிற்றுப்பொருமல், புளியேப்பம், பித்தவாய்வு, பசியின்மை, அசிரணம், சோம்பல். கைகால் அசதி, பௌந்திரம், உள்மூலம், வெளிமூலம், கீழ்மூலம், இரத்தமூலம், மூல முளைகள். மூலச் சூட்டினால் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.




சகல விபரங்களுமடங்கிய கேட்லாக் இனாம்.

15 நாள் டின் ரூ. 3/- 30 நாள் டின் ரூ. 5-50
தபால் செலவு சதம் 85

ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு - கொழும்பு

அடலப் ஈச்மன் கதை

ஜோ.ஏ. எம். தாஸ்

# நியூரெம்பர்க் விசாரணையில் திடுக்கிடும் தகவல்கள்!

கொலைபாதகன் ஈச்மனின் தலைமையில், நாஜி வீரர்கள் செய்த கொடுமைகளுக்குப் பலியானவர்கள் ஒருவரா, இருவரா? அறுபதுலட்சம் பேர்கள்!

அவர்களில்—

அழகு மாதர்கள் எத்தனை பேர்! கட்டிளங்காளைகள் எத்தனைபேர்! கள்ளமில்லா உள்ளம் படைத்த பச்சிளம் பாலகர்கள் எத்தனைபேர்! பல்லெலாம் விழுந்த படுகிழங்கள் எத்தனை பேர்! ஆண்கள் என்றும், பெண்கள்என்றும், சிறுவர்கள் என்றும், வயோதிபர்கள் என்றும் பாராமல் அத்தனை பேரையும் நாஜிகள் எப்படியெப்படியெல்லாம் நிஷ்டூரமாகக் கொடுமைப் படுத்திக் கொன்று குவித்தார்கள் என்பதை அறியும்பொழுது உடலெல்லாம் நடுங்குகிறது!

இரண்டாவது உலகமகா யுத்தம் முடிவடைந்ததும், போருக்குக்காரணமான நாஜி தலைவர்களைக் கைதுசெய்து நியூரம்பர்க் என்னுமிடத்தில் விசாரணை மன்றம் ஒன்றை ஏற்படுத்தி விசாரணை செய்தார்கள். அப்பொழுது யூதர்களைக் கொன்று குவித்ததைப் பற்றிப் பல தகவல்கள் வெளியாயின.

ஆனால்—

அப்பொழுது ஈச்மனைக் கைதுசெய்ய முடியவில்லை. அவன் தலைமறைவாக ஒளிந்து கொண்டிருந்தான். ஆனாலும் ஈச்மனைப்பற்றியும் அவன் தலைமையில் நடைபெற்ற கொடுமைகளைப் பற்றியும் நாஜித்தலைவர்கள் பலர் கூறினார்கள். அந்த விசாரணையின் முடிவில் விசாரணை செய்யப்பட்ட நாஜித்தலைவர்கள் அத்தனைபேரும் தூக்கிலிடப்பட்டனர்!

நியூரம்பர்க் விசாரணையின் போது, ஒட்டோ ஒலன்டார்ப் என்ற நாஜி வீரன் ஒருவன் பல உண்மைகளை வெளியிட்டான்.

1941ம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து, 1942ம் ஆண்டுவரையில் ஒலன்டார்ப்பின் கண்காணிப்பில் இருந்த சவக்கிடங்கில் மாத்திரம் 90,000 பேரைப் புதைத்தார்களாம்!

யூதர்களை ஒழிப்பதற்கான திட்டங்களை மிக மிக இரகசியமாகவே தீட்டினர்களாம். ஜெர்மனியிலும், ஆஸ்திரேலியாவிலும், போலந்திலும், இன்னும் எங்கெல்லாம் யூதர்கள் இருக்கிறர்களோ, அவர்களையெல்லாம் ஒருவர் பாக்கியில்லாமல் ஒழித்துக்கட்டுவதற்காக, அடலப் ஈச்மன் 'ஒரே வழி' என்னும் திட்டத்தைத் தீட்டினனும். அந்தத் திட்டத்தை ஹிட்லரும் அங்கீகரித்தான்.

சிறுவர், பெரியவர்கள், வாலிபர்கள், வாலைப் பெண்கள் என்றெல்லாம் பார்க்காமல் அவர்கள் உடைகளைக் களைந்து, நிர்வாணமாக நிற்க வைத்து அல்லது மண்டியிடச்

போல் இருக்குமாம் இதில் பதினைந்து அல்லது இருபது குழந்தைகளை ஏற்றுவார்கள் களங்கமில்லாத யூதக்குழந்தைகள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருப் பார்கள் அவர்கள் இப்பொழுது கொலைக்களத்தில் நின்றுகொண்டிருப்பதை எப்படி அறிவார்கள்?

மறுகணம்—

வானை ஸ்டார்ட் செய்யும் அதேநேரத்தில் டிரைவர் ஆசனத்திற்குப் பக்கத்தில் இருக்கும் ஒரு விசையை முடுக்குவார்கள். உடனே நச்சுவாயு ஒரு குழாயின் வழியாகப் பீரிட்டும் பாயும்? சில நிமிடங்களுக்குள் பிணமாகிவிடுவார்கள் ஒரு பாவமும் அறியாத அந்தக் குழந்தைகள். முன்னதாகவே தயாராக வெட்டப்பட்டிருக்கும் சவக்கிடங்குகளை நோக்கி வானை ஓட்டிக்கொண்டுபோய், வானின் பின் கதவைத் திறந்து, சிறுவர்களின் பிணங்களைப்போட்டுப் புதைத்துவிடுவார்கள்!

இன்று—

டெல் அவீவ் நீதிமன்றத்தில் "நான்ஒரு மனிதன் இரத்தம் வடியும் ஒரு சிறு புண்ணைப் பால்ப்பதற்குக்கூட என் மனம் தாங்கவில்லை'' என்றுகூறும் ஈச்மன். அந்தக்காலத்தில் ஒரு மனிதனுக இருக்கவில்லை. இரத்த வெறிபிடித்து— யூதர்களை ஒழித்துக்கட்ட வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் வாழ்ந்த பித்தனுகவே இருந்தான்!

ஈச்மனின் காரியாலய மேசையின் மேல் ஒரு 'பேப்பர் வெயிட்' இருக்கும், அது எதனுல் செய்யப்பட்டது தெரியுமா? அவனுல் கொலை செய்யப்பட்ட அறுபதுலட்சம் யூதர்ளில் ஒருவனதுமண்டை ஓட்டினுல் செய்யப்பட்டது!



ஈச்மனை சிறைச்சாலையில் சென்று விசாரணை நடாத்திய இஸ்ரேலிய பொலீஸ் தலைமை அதிகாரி ஆவ்னர் ஸெஸ்ஸை மேலே உள்ள படத்தில் காணலாம். ஈச்மனின் வாக்கு மூலம் ஒலிப்பதிவு செய்யப்பட்ட விதம் பற்றி, நீதிமன்றத்தில் இவர் சாட்சியமளித்தார்.

யூதர்களை வேறு இடங்களுக்கு அனுப்பப் போவதாகச் சொல்லி அவர்களைக் குடும்பம்குடும்பமாகப் பெரியலொறிகளிலும், ஜீப்களிலும் ஏற்றிக்கொண்டு வருவார்கள். இடையில் சில நாஜி அதிகாரிகள் வழிமறித்து அவர்களிடமிருந்த சிறுசிறு பொருட்களைக்கூட ஒன்றுவிடாமல் பிடுங்கிக்கொள்வார்கள். அந்த யூதர்கள் அணிந்திருந்த சப்பாத்துக்களைக்கூடப் பறிமுதல்செய்து ஜெர்மன் ராணுவத்தினர் பாவிப்பதற்கென்று அனுப்பிவிடுவார்கள். யூதர்களின் சொத்துக்கள் எல்லாம் ஜெர்மனிய அரசாங்கத்திற்குச் சொந்தமாகிவிடும்!

பின்னர், ஒரு பெரிய மைதானத்திற்கு யூதர்களைக் கடத்திக்கொண்டுபோய், அங்கே அவர்கள் உயிரைப் போக்குவார்கள்! இந்தக்கொடுமையை விபரித்து எழுதுவதற்கே கை நடுங்குகிறது!

சொல்லி நிஷ்டூரமாகச் சுட்டுத்தள்ளுவார்கள். இன்னும் சிலர் நேருக்கு நேராக நின்று சுடாமல், பின்பக்கமாக நின்று கழுத்தில் சுட்டுக் கொல்வார்களாம்!

1942ம் ஆண்டு வரையில் பெரியவர்களையும் குழந்தைகளையும் இப்படித்தான் கொன்று குவித்தார்களாம். இந்தக் கொடுமையைப் பார்ப்பதற்குப் பல நாஜி வீரர்களுக்குச் சகிக்க வில்லையாம். எனவே ஹிட்லருக்கு ஒரு மனு தாக்கல் செய்தார்கள். அதில், 'குழந்தைகளைச் சுட்டுக் கொல்வதைப் பார்க்க சகிக்கவில்லை' என்று குறிப்பிட்டிருந்தார்கள், எனவே, குழந்தைகளை மட்டும் கொல்வதற்கென்று நச்சுப்புகை அடைக்கப்பட்ட 'வான்'களைத் தயார் செய்து அனுப்பிவைத்தான் ஹிட்லர்.

இந்த நச்சுப்புகை வான்களைப் பார்ப்பதற்கு நன்ருக மூடப்பட்ட லொறிகளைப்

## ஈச்மனின் அப்பீல்!

இரண்டாவது உலக மகா யுத்த காலத்திலும் அதற்கு முன்புமாக சுமார் அறுபது லட்சம் யூதர்களைக் கொன்றுகுவித்த குற்றத்துக்காக பிடிக்கப்பட்டு, இஸ்ரேல் அரசாங்கத்தின் விசேட நீதிமன்ற விசாரணைக்கு உட்பட்ட ஈச்மனின் பயங்கர வரலாற்றை சென்ற சில வாரங்களாகப் படித்துவந்தீர்கள். தனக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனைக்கு எதிராக ஈச்மன் செய்து கொண்ட அப்பீலின் விசாரணை சென்ற 22-3-62ல் ஆரம்பமாகியுள்ளது.

இன்னும் சில தினங்களில் அப்பீல் கோட்டின் தீர்ப்பு வெளிவந்துவிடுமெனத் தெரிகிறது.

---

கட்டான உடலும் காந்த விழிகளும் கொண்ட கன்னி!

ஆனாலும்

## ஈச்மனுக்கு மூத்த சூர்ப்பனகை!

நெஞ்சை நிலைகுலைக்கும் இவளுடைய வரலாறு

புதினத்தில் வருகிறது!

'தாஸ்' எழுதுகிறர்!

இரத்த வெறி பிடித்த கொடுங்கோலன் ஹிட்லரின் ஆட்சியில் ஈச்மன் மாத்திரம்தான் கொலைபாதகங்கள் புரிந்த கொடியவன் என்று சொல்லி விட முடியாது. இவனைப் போல் இன்னும் எத்தனையோ பேர் இருந்திருக்கிறர்கள். அவர்களில் ஒருத்திதான் எல்ஸி என்ற கிராதகி!

ஹிட்லரின் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்து வந்த இவள் செய்த கொடுமைகள் எண்ணற்றவை. ஈச்மனுவது யூதர்கள் என்ற ஒரு தனிப்பட்ட இனத்தைப் பழிவாங்கவேண்டும் என்று கொலைகள் பலவற்றைச் செய்தான்.

ஆனல்—

கிராதகி எல்ஸி, ஆண் இனத்தையே துன்புறுத்தி இன்பம் கண்டாள்! ஹிட்லரின் நாஜிக் கட்சியைச் சேர்ந்த ஒரு ஜெர்மானிய வீரனின் மனைவியான இவளது வாழ்க்கை மிக மிக விசித்திரமானது! பயங்கரமானதும் கூட.

ஜெர்மனியப் பெண்ணுன இவள், அதே ஜெர்மானிய இனத்தைச் சேர்ந்த ஆண்களைக் கொடுமைப்படுத்திக் கொன்று குவித்த அதிசயம், ஒரு காலத்தில் அகில உலகத்தையே கிடுகிடுக்க வைத்தது!

கட்டுடலும், காந்தக் கண்களுமாக, கண்டவர்களையெல்லாம் மயக்கிக் காம இச்சையைத் தூண்டி விடக் கூடிய அத்தனை அழகுடையவளாக இருந்தாள் அவள் அவள் கண்கள் எப்பொழுதும் மருண்டபார்வையைச் சொரிந்து கொண்டிருக்கும். அந்தக் கண்களிலே ஒரு வித கொடூர ஆசை வழிந்துகொண்டேயிருக்கும். அவள் புன்முறுவலுக்கு அடிமைாகித் தங்கள் உயிர்களைப் பலிகொடுத்த ஆடவர்கள் பலர்!

கட்டிளங்காளைகள் பலரைக் கொன்று குவித்த இந்தக் காமப் பிசாசை 'செஞ்சூனியக்காரி' என்றும் அழைப்பார்கள். இந்த அரக்கி எல்ஸியின் வரலாறு புதினத்தில் ஆரம்பமாகிறது படிக்கத் தவருதீர்கள்!

சிறுகதை

# அவள்தான் பெண்

யாழ்ப்பாண ஸ்டேஷனில் கொழும்பு செல்லும் மத்தியான யாழ்தேவி புறப்படும் சமயம். அவசரம் அவசரமாகப் பெட்டிகளை உள்ளே விட்டெறிந்தேன். பெட்டியில் நான் காலை வைக்கவும், எனக்காகக் காத்திருந்ததுபோல் புகையிரதம் உடலை ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டுக் கிளம்பியது.

என்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு சுற்றிலும் உள்ள பிரயாணிகளைப் பார்த்தேன். என்னுடன் மருத்துவக்கல்லூரியில் எம். பி. பி. எஸ். பட்ட வகுப்பில் பயிற்சிபெறும் மாணவர்களிற் சிலர், கிழவர் ஒருவர். அவர் அருகே ஓர் இளம் பெண். இவ்வளவுபேரும்தான் அந்தப் பெட்டியில்.

சிலநிமிடங்கள் என் சகபாடிகளுடன், உரையாடிவிட்டு இமைகளை மூடியவாறு இன்பநினைவில் லயித்துப்போயிருந்தேன். நினைவின் வழி நீண்டுகொண்டிருந்தது.

நீலவானையும், நீண்ட திரைக்கடலையும்பற்றிக் கவிதை இயற்றிக்கொண்டிருந்தாள் என் உள்ளத்தை நிறைத்தவள். புறஉலக நினைவற்று அவளுடன் மானசீகமாகப் பேசிக்கொண்டிருந்தேன். பெரிய பெரிய கப்பல்களையெல்லாம் விழுங்கிவிட்டு ஒன்றுமே அறியாததுபோல் அமைதியாகத் தூங்கிக்கொண்டிருக்கும் ஆழ்கடலைப்போல் சிந்தையில் நினைவுகள் சிதற வாய்மூடி மௌனியாக உட்கார்ந்திருந்தேன்.

ஏககாலத்தில் எழுந்த பல சிரிப்பொலிகள் என் சிந்தனைத் தொடரை அறுத்துவிட்டதும் நான் சுதாரித்துக் நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

ஆமாம்; என் உள்ளத்தே நிறைந்து உணர்வூட்டிக் கொண்டிருந்தவள் என் வாய்வழியே வழுக்கிவீழ்ந்துவிட்டாள் அதுதான் என்சக மாணவர்களின் கேலிச் சிரிப்புக்குக் காரணம்.

என் முகத்தில் அசடு வழிந்தது. அதற்கு மேலும் அந்தப்பெட்டியில் இருக்கவிரும்பாமல் மெல்ல எழுந்து வேறு பெட்டிக்கு நழுவினேன். என்னைப் பின் தொடர்ந்து வந்தான் என் ஆப்த நண்பன் அரவிந்தன்.

"யாரடா அந்த அவள்? இத்தனைபேர் மத்தியில் உன்னைப் பித்தனாக அடிக்கும் சக்திவாய்ந்த அந்த 'அப்சரஸ்' யாரென்று அடியேன் அறியலாமோ?" — அரவிந்தன் நாடக பாணியில் கேட்டான்.

அரவிந்தன் என் நண்பன் என்பதோடு அவன் திறந்த வாய்ப்பேர்வழியல்ல என்பதும் எனக்குத் தெரியும். ஆகவே என் கதையை அவனிடம் கூறினேன்:

அவள் என் அயல்வீட்டுப் பெண். உறவுமுறை ஒன்றும் கிடையாது. அவள் ஆரம்பவகுப்பில் படித்த நாள் தொட்டே நான் அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது வழக்கம். அந்த வழக்கத்தைக்கொண்டு நான் அவள் வீட்டிற்குச் செல்வதை யாரும் ஆட்சேபிப்பதில்லை.

சிறுமியாக இருந்தபோது அவள் 'அண்ணு, அண்ணு' என்றுதான் என்னைக் கூப்பிடுவாள். பெரியவளாக வளர்ந்த பின்னும் நான் அவளுக்கு அண்ணுதான். வளர்ந்த பின்னும் நான் அவளுக்கு அண்ணுதான். வளர்ந்தபின்னும் அவள் அண்ணு என்று அழைப்பதை அடியோடு வெறுத்தேன் நான். வெறுப்பை வெளியிலும் காட்டிக் கொண்டேன். ஆனல் அதைப் புரிந்துகொண்டதாகக் காட்டிக் கொள்வதில்லை அவள்.

கல்லூரிக்குத் திரும்புமுன் அவளிடம் விடைபெறக் கருதி இன்று காலை அவள் வீட்டிற்குச் சென்றிருந்தேன்.

வீட்டின் முன்பக்கத்திலே இருந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தவள் என்னைக்கண்டதும் "அண்ணு வாருங்கள்" என்று கூறி அன்புடன் வரவேற்ருள்.

"சக்தி"

"அண்ணு என்று சொல்லாதே" என்று கடுமையாகக் கட்டளையிட்டேன் நான்.

"ஏன் அண்ணு" என்று பச்சைக் குழந்தைபோல் செல்லமாகக் கேட்கவே எனக்கு ஆத்திரம் எல்லை மீறியது. அதன் பயன், அவளின் பட்டுக் கன்னத்தைப் பதம்பார்த்துவிட்டது என் முரட்டுக்கை.

கன்னம் குங்குமச் சிவப்பாக மாறிக் கொண்டிருந்தது. அந்த மாற்றத்தைப் பார்த்துக்கொண்டிருக்க எனக்குப் பொறுக்கவில்லை, ஒன்றும் பேசாமல் திரும்பிச் சென்றுகொண்டிருந்தேன். காற்றில் படபடத்துக்கொண்டு என்னைத் தொடர்ந்து வந்தது அவள் எழுதிக்கொண்டிருந்த கடதாசி. அதை எடுத்துக் கைக்குள் கசக்கி வைத்துக்கொண்டு வேகமாக சென்று தேதனையுடன் சாய்ந்தேன் சோபாவில்.

என்னை முற்போக்குள்ளவனாகவும் ஓரளவு படித்தவனாகவும் ஆக்கியது அவளின் அன்பு ஒன்றுதான் என்பதை என்னல் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இப்படியெல்லாம் என்னை உயர்ந்த நிலைக்கு உருவாக்கிக் கொண்டிருப்பவளிடம் நான் அன்புடன் ஆசையுடன் நடக்கமுடியாதபடி 'அண்ணு' முறைகூறி என்னை எட்ட வைத்திருந்தாள் அவள். அந்த ஆத்திரமையின் விளைவுதான் என்னை முரடனாக மாற்றியது.

சிறிதுநேரம் வேதனையால் குமைந்துகொண்டிருந்தபின், என்னஎழுதிக்கொண்டிருந்தாள் என்பதை அறியும் ஆவலுடன் கையில் கசக்கி வைத்திருந்த கடதாசியைப் பிரித்தேன்.

"அத்தானும் யானும் அருகிருந்து" என்ற வரியை முதலடியாகக் கொண்டு பல பாக்கள் இயற்றப்பட்டிருந்தன. அதில் எனக்கு ஞாபகமான ஒரு பாட்டு.

"அத்தானும் நானும் அருகருகே
உட்கார்ந்து
அழகான கதைகள் புனைவோமா
எத்தனைதான் தொல்லை எமைநோக்கி
வந்தாலும்
இன்பமாய்க் கவிதை இயற்ருேமா."

வாயால்மட்டும் அண்ணு என்று கூறித் தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்கிருளே தவிர உண்மையில் என்மேல் எல்லையில்லாத அன்பையும், நானும் தானும் உயர்ந்த இலட்சியங்களுக்காகப் பாடுபடவேண்டுமென்ற கொள்ளை ஆசையையும் உள்ளத்துக்குள்ளே புதைத்து வைத்துத் தவிக்கிருள் என்பதை எடுத்துக்காட்டின அந்த நான்கு வரிகள்.

எது அவளிடம் இருக்கவேண்டுமென்று ஆசைப்பட்டேனே அது அவளிடம் இருந்தது. அந்த விநாடியே என் உள்ளம் ஆனந்தசாகரத்தில் மூழ்கத் தொடங்கியது.

யாழ்தேவி புறப்பட மேலும் இரண்டு மணித்தியாலங்கள் இருந்தன. கல்லூரிக்குப் புறப்படவேண்டிய ஆயத்தங்களெல்லாம் செய்ததும் 'அம்மா அப்பாவிடமும் விடை பெற்றுக்கொண்டு திரும்பவும் அவள் வீட்டுக்குச் சென்றேன்.

வாசலில் என்னைக் கண்டதும் காணுதவள்போல் மேலே செல்ல எத்தனித்தவளை தடுத்து நிறுத்தினேன். நின்றுவிட்டாள் மௌனமாக.

கன்னத்திலேயே கண்களைப் பதித்த வண்ணம் ஒன்றும் அறியாதவன்போல் "சரி திரும்பிவரும்போது என் வாணிக்கு என்னவாங்கிவர..?" என்ற கேள்வி ஒன்றைப்போட்டு அவளின் மௌனத்தைக் கலைக்க எத்தனித்தேன்.

எல்லாவற்றையும் உடனே மறந்து சிரித்த முகத்துடன், "என் அண்ணு நல்லவராகவும், பரீட்சையில் திறமான சித்தியடைந்து கெட்டிக்காரராகவும் வருவதுதான் எனக்களிக்கும் பெரிய வெகுமதி" என்ருள்.

அவளின் அன்புப் பதில் எனக்குப் புதிதல்ல ஆச்சரியப்படுவதற்கு.

"உன் விருப்பப்படியே வெகுமதி அளிப்பேன்" என்று கூறிவிட்டு வந்தேன். நீக்கமற என்னுள் நிறைந்துநிற்கும் அவளது பெயரை என் உதடுகள் தாமே உதிர்த்துவிட்டன.

"எவள் ஒருத்தி உயர்ந்த இலட்சியங்களுக்காகப் பாடுபடும்படி ஒருவனைத் தூண்டுகிருளோ அவள்தான் உண்மையான பெண்" என்று கூறி என்னைப் பெருமைப்படச் செய்தான் அரவிந்தன். ●

**'அண்ணு' என்ற வார்த்தையில் ஒழிந்து கிடந்தது அழியாக் காதல், ஆனல் அவன் படிப்பை மறந்து, உயர்ந்த லட்சியங்களைத் துறந்து காதல் பித்தனுக மாறிவிடக்கூடாதே என்ற ஓரே நோக்கத்தோடு அந்த 'அண்ணு' என்ற பதத்தால் வேலி அமைத்தாள் அந்த முற்போக்குப் பெண்.**

# ‘டுப்ளிகேட்’ பத்மினி எல். விஜயலட்சுமி

“நீ அச்சில் வார்த்தது போல் என்னைப்போலவே இருக்கிருய். சினிமாவில் நீ ஏன் சேரக்கூடாது? நீ என் அருமையான தங்கையைப் போலிருப்பாய்”.

இப்படி எல், விஜயலட்சுமியைப் பார்த்துக் கூறியது யார் தெரியுமா? பத்மினிதான். பத்மினி நடித்த படமொன்று ஷூட்டிங் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அங்கு ஷூட்டிங் பார்க்கச் சென்றிருந்த எல், விஜயலட்சுமிக்கும் பத்மினுக்குமிடையே மேற்கண்டவாறு சம்பாஷனை நடந்தது.

பதினேழு வயதுக்குள் புகழேணியில் விறு விறு என்று ஏறிக்கொண்டிருக்கும் விஜயலட்சுமிக்கு ஆறு பாஷைகள் தெரியும்.

தமிழ் (தாய்ப்பாஷை) தெலுங்கு, ஹிந்தி, மலையாளம். வங்காளி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெகு சரளமாகப் பேசுவார் விஜயலட்சுமி.

இவர் கொன்வென்டில் படித்துக்கொண்டிருந்தபோது எல்லோரும் இவரை ‘பத்மினி’ என்றே அழைப்பார்கள். பரதநாட்டியத்தில் தேர்ச்சி பெற்ற இவர் பல மேடைகளில் நாட்டியமாடியவர். இவரது நாட்டியத்தை ஒருமுறை பார்த்த திரு. டி. எல். நாரயணு விஜயலட்சுமியின் பெற்ருரை அணுகி இவரை சினிமாவுக்குள் இழுத்துவிட்டார்.

‘சிப்பாய் கூத்துரு’ என்ற தெலுங்குப் படத்தில் விஜயலட்சுமி முதன் முதலாக நாட்டியமாடினர். சுமார் பதினைந்து படங்களில் பாகமேற்ற தமிழ்ப்பெண்ணன விஜ்யலட்சுமி நடித்தவை பெரும்பாலும் மலையாளப் படங்களே.

இவர் சினிமாத்தொழிலில் ஈடுபட்டபின்பும் தொடர்ந்து பள்ளி சென்ருர். கடைசியில் தனது ஆருவது பாரத்தோடு படிப்பை முடித்துக்கொண்டார்.

தனது வருங்காலத்தைத் தன் பெற்ருர் கையில் விட்டு விட்டதாகக் கூறும் விஜயலட்சுமி தனக்குக் காதலைப்சற்றி ஒன்றுமே தெரியாது என்று கூறுகிருர்.

‘பெற்றமனம்’ என்ற தமிழ்ப் படத்தில் சிவாஜியுடன் நடிக்கக் கிடைத்ததில் தான் பெரிதும் மகிழ்ச்சியடைவதாக விஜயலட்சுமி கூறுகிருர்.

ஆங்கில நடிகர்களில் சூசான் ஹேவார்ட், ஆட்ரி ஹெப்பேர்ன், ஹிந்தி நடிகர்களில் நூட்டான், தமிழ் நடிகர்களில் சிவாஜி கணேசன், சாவித்திரி ஆகியவர்களே இவரது அபிமான நட்சத்திரங்களாம். ஆனால் இவருக்கு பத்மினியைத்தான் அதிகமாகப் பிடிக்கும். கமலா லட்சுமணனில் ஓரே பக்தி.

விஜயலட்சுமி ஹிந்திப் படத்திலும் நடிக்கவிருக்கிருராம்.



## ஜெமினி கணேசன்–சாவித்திரி இலங்கை வருகிருர்கள்!

தென்னகத் திரைவானில் ஒளி வீசும் முன்னணி நட்சத்திரங்கள் பலர் அடுத்தமாதம் நடுப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்கிருர்கள்.

இலங்கையின் மாதச் சஞ்சிகையான ‘அமுத’த்தின் முதலாவது ஆண்டு விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காகவே இவர்கள் இலங்கைக்கு வருகிருர்கள்.

ஜெமினி கணேசன், சாவித்திரி கணேசன், கல்யாண்குமார், எல். விஜயலட்சுமி, குலதெய்வம் ராஜகோபால், மனோரமா ஆகியோரே இங்கு வருகை தருபவர்களாகும்.

ஆண்டு விழா கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு திரிகோணமலை ஆகிய நகரங்களில் நடைபெறவிருப்பதால் இந்த நான்கு நகரங்களிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளில் இவர்கள் பங்குபற்றுவார்கள். இவர்களுடன் குலதெய்வம் ராஜகோபாலின் நாடகக் கோஷ்டியினரும் வரவிருக்கின்றனர். குலதெய்வம் ராஜகோபால் கோஷ்டியினரின் நாடகமும், வில்லுப்பாட்டும் நடைபெறுமெனத் தெரிகிறது.

## ஹரிநாத் ‘ராஜா’

‘சீதாராம கல்யாணம்’ படத்தில் ராமராக நடித்த ஹரிநாத் ஏவி. எம். ‘அன்னை’யில் பானுமதியின் பையனுக நடித்துவருகிருர். இவர் பெயரை ஏவி. எம். மெய்யப்பச் செட்டியார் ‘ராஜா’ என்று மாற்றிவைத்திருக்கிருர்.

இவர் இனி தமிழ்ப்பட உலகில் ‘ராஜா’வாக நடமாடுவார்.

## இந்தியாவின் முதல் படம்

இந்தியாவில் முதன் முதலாகச் சினிமாப்படமெடுத்தவர் டி, ஜி. மால்கே என்பவர். இவர் தமது வீட்டையே ஒரு ஸ்டூடியோவாக அமைத்துக்கொண்டு, ‘ஹரிச் சந்திரா’ என்ற படத்தை எடுத்தார். படாதிபதியான இவரே டைரக்டராகவும் கடமையாற்றினர்.

## ‘எங்கிருந்தோ வந்தான்’

ஐயர் புரொடக்ஷன்சார் ‘எங்கிருந்தோ வந்தான்’ என்ற பெயரில் ஒரு படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளனர். இதில் கல்யாண்குமாரும், புதுமுகம் விஜயகுமாரியும் ஜோடியாக நடிக்கவிருக்கின்றனர். முத்துராமன் எம். வி. ராஜம்மா ஆகியோரும் நடிக்கவிருக்கின்றனர். ‘மா. ரா’ வின் வசனம் விறுவிறுப்பாக இருக்குமாம்!

## தென்னகத்தில் முதல் சினிமா பத்திரிகை

தென் இந்தியாவில் முதன் முதல் சினிமாப்பத்திரியை ஆரம்பித்தவர் யார்தெரியுமா? எஸ். கே. வாசம் என்பவர் ‘மூவிமிரர்’ என்ற சினிமாப் பத்திரிகையை சுமார்30வருடங்களுக்கு முன் சென்னையில் ஆரம்பித்தார். இப்பத்திரிகை ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது.

## பஞ்சுவாக ஜெமினி

முழங்கால் வரை கால்சட்டையும், கிழிந்தகோட்டும், தலையில் மப்ளர் கட்டுமாக ‘மனிதன் மாறவில்லை’ என்ற படத்தில் ‘பஞ்சு’ என்ற வேலைக்காரனுக வருகிருர் ஜெமினி கணேசன்.

இப்படத்தில் நாகேஸ்வரராவ், ஜமுனு, ராஜா, எல். விஜயலட்சுமி, ரங்கராவ், ஆகியோர் நடிக்கின்றனர் சக்கரபாணியே கதை, வசனம், எழுதி படத்தையும் டைரக்ட் செய்கிருர்.

## பம்பாயில் நவீனதியேட்டர்

இப்போது உள்ள படங்களைக் காட்டிலும் இரண்டு மடங்கு அகலமுள்ள (70 எம் எம்.) படங்களைத் திரையிடக்கூடிய ஒரு தியேட்டர் இப்பொழுது பம்பாயில் நிறுவப்பட்டிருக்கிறது. இத் தியேட்டர் எயர் கொண்டிஷன் முதல் சகல நவீன வசதிகளும் கொண்டது.

இத்தியேட்டரில் முதன் முதலாக சாமுவேல் பீரான்ஸ்டன்ஸ் தயாரித்த 70 எம் எம். ரெக்னிரமா — ரெக்னிக் கலர் படமான கிங்—ஓவ்—கிங்ஸ் என்ற படம் திரையிடப்பட்டிருக்கிறது. 168 நிமிடங்கள் ஓடக்கூடிய இப்படம், கிறீஸ்து நாதரின் சரித்திரத்தைப் பின்னணியாகக் கொண்டதாகும். பம்பாயில் 70 எம். எம். வசதிகளுடன் கூடிய முதல் தியேட்டர் இதுவாகும்.

## ஜப்பானில் சினிமா தொழில் அடைந்துள்ள முன்னேற்றம்!

சினிமாப்படத் தயாரிப்பு நிலையங்கள் சென்னையில் வீதிக்கொன்ருக மலிந்துள்ளன. வட நாட்டிலும் இதேகதிதான். ஆனுல் இங்கு தயாரிக்கப்படும் படங்கள் தரத்தில் உயர்ந்தவை என்று கூறிவிடமுடியாது.

ஆனுல் ஜப்பானில் பதினெரு படத்தயாரிப்பு நிலையங்கள் மட்டுமே இருக்கின்றன. குறிப்பிட்ட சில தகுதி வாய்ந்தவர்கள் மட்டுமே இங்கு படங்களைத் தயாரிக்கிருர்கள். இங்குள்ள அத்தனை நிலையங்களும் ஜப்பானின் தலைநகரான டோக்கியோவிலேயே இருக்கின்றன. இங்குள்ள பட உற்பத்தியாளர்கள் இருவகைப் படங்களை மட்டுமே எடுக்கிருர்கள். ஒன்று முழு நீளப்படம் மற்றது குறு நீளப் படம்.

முழு நீளப்படம் என்றதும் நமது தமிழ்ப்படங்கள்போல் மூன்று, மூன்றரை மணி நேரம் ஓடி தலையிடியைக் கிளப்பிவிடும்படங்கள் என்று அர்த்தமல்ல. சுமார் ஒன்றே கால் மணித்தியாலங்கள் முதல் இரண்டு மணித்தியாலங்கள் வரை திரையில் ஓடக்கூடிய படங்களே முழு நீளப் படங்கள். குறு நீளப் படங்கள் 18 நிமிடங்கள் முதல் 30 நிமிடங்கள் வரை ஓடக்கூடியனவாயிருக்கும். இந்த இருவகைப் படங்களையும் ஈஸ்ட்மென் கலரில் தயாரிக்கிருர்கள்.

இங்கு படங்கள் திரையிடப்படும் தியேட்டர்கள் அத்தனையும் படத்தயாரிப்பாளர்களுக்கே சொந்தமானவையாக இருக்கின்றன. ஒவ்வொரு படத்தயாரிப்பாளரும் ஆண்டுக்கு இத்தனை படங்கள்தாள் தயாரிப்பது என்று திட்டமிட்டுச் செயலாற்றுகிருர்கள். அதோடு அவற்றை நினைத்தபோது திரையிடவும் முடிகிறது.

கதை அம்சத்தில் இவர்கள் அதிக அக்கறை செலுத்துவதில்லை. குறிப்பிட்ட ஒரு சம்பவத்தை நிலைக்களனுகக்கொண்டு அதி அற்புதமான படங்களை இவர்கள் தயாரித்து விடுகிருர்கள்.

### 13-ம் நூற்றுண்டின் பயங்கர மன்னன்

# பகைவனிடமும் வீரத்தை மெச்சிய செங்கிஸ்கான்!

கி. பி. 1189ம் வருடம் இவன் கான் அல்லது காட்டு வாசிகளின் தலைவன் என்று பிரகடனப் படுத்தப்பட்டான். இக்காலத்திலிருந்து இவன் உலகம் முழுவதையும் வெற்றி கொள்ள வேண்டுமென்று முயற்சித்தான்.

கி. பி. 1219ல் செங்கிஸ் கான் சீனு முழுவதையும் கைப்பற்றினுன். அதன்பின் ஆசியா முழுவதையும்ஐரோப் பாவையும் வெற்றிகொள்ளும் நோக்கம்கொண்டு மேற்கு நோக்கிப் புறப்பட்டான். மத்திய ஆசியாவிலிருந்த சுல்தான்கள் இவனேடு பொருதினர். ஒருவர்பின் ஒருவராக எல்லாச் சுல்தான்களையும் மிருகத்தனமாக நிர்மூலமாக்கினுன்.

மத்திய ஆசியாவின் ஆட்சி பீடங்களையெல்லாம் வேரோடு களைந்தான். இவன் ஆபுகானிஸ்தானுக்குள் புயல்போலப் பாய்ந்தான், இவனுடைய தாக்குதலைத் தடுத்து நிறுத்த மொகமெட் கவார் சாம் ஷா மன்னனின் வீரமிக்க மகன் இளவரசன் ஜலாலுதீன் சினங்கொண்டு எழுந்தான். பலமுறை முயன்றும் செங்கிஸ்கானை வெற்றிகொள்ள முடியவில்லை. கடைசியில் ஜலாலுதீன் புறமுதுகு காட்டி ஓடவேண்டியதாயிற்று. ஆயினும் செங்கிஸ்கான் தொடர்ந்து துரத்திச் சென்ருன்.

ஒரு மலையின் உச்சிக்கு வந்துவிட்டான் ஜலாலுதீன். கீழே இந்துநதி பாய்ந்து கொண்டிருக்கிறது. மேலே செல்ல முடியாது. அவன் தவித்துக்கொண்டிருக்கையில் பின்னுல் புலியெனப் பாய்ந்து வந்தான் செங்கிஸ்கான். உடனே தனது முழுப் பலத்தையும் திரட்டி செங்கிஸ்கான்மீது சிங்கம்போல் பாய்ந்தான் ஜலாலுதீன். தனியே நின்ற ஜலாலுதீனை செங்கிஸ்கானின் ஆட்கள் நாலா புறங்களிலுமிருந்து தாக்கினுர்கள். படுகாயமடைந்த ஜலாலுதீன் கொடியவர்களிடம் அகப்படப் பிரியப்படாமல் மலை உச்சியிலிருந்து யாரும் கற்பனைகூட செய்யமுடியாத வகையில் மிகத்தைரியமாக இந்துநதிக்குள் பாய்ந்து நீந்திச் சென்று மறுபுறத்தில் கரை ஏறினுன்.

ஆச்சரியப்படத்தக்க முறையில் பல வீரதீரச் செயல்களைப் புரிந்த செங்கிஸ்கான் ஜலாலுதீனின் துணிவுமிக்க செயலைக்கண்டு கிறிதுநேரம் வாயடைத்து நின்ருன்: "இந்த வீர மகனைப் பெற்ற தந்தை உண்மையில் அதிஷ்டசாலியே" என்று அவன் வாய் இலேசாக முணுமுணுத்தது.

உண்மையில் ஜலாலுதீன் இந்துநதிக்குள் பாய்ந்த சம்பவம் சரித்திரத்தில் ஒரு சுழல் நிறைந்த பக்கமாகும்.

ஆபுகானிஸ்தானை வெற்றி கொண்டதும் செங்கிஸ்கானின் படைகள் ஈரானுக்குள் புகுந்தன.

ஈரானை இரத்த வெள்ளத்தில் ஆழ்த்தியதோடு ஆசியா மைனரையும் பஸ்மீகரமாக்கினுன் கான். அதன்பின் ஈராக்குக்குள் புகுந்தான். ஆனுல் இவனது தென்புறத் தாக்குதலை வெற்றிகரமாகத் தடுத்து நிறுத்தினுன் அல்-முஸ்டான்-சிர்-பில்லா. இவன் அப்பாசிட் அரசனுகும்.

பாக்தாத்துக்குள் நுழைய முடியாதுபோகவே செங்கிஸ்கான் அந்த அழகான நகரத்தை நிர்மூலமாக்கிவிட்டுத் தனது தலைநகரான காரகுராமுக்குத் திரும்பவேண்டியதாயிற்று.

இங்கு இவன் தங்கியிருந்து தனது ஆட்சியை நடத்திவந்தான். கி: பி, 1227ம் வருடம் வரை உலகம் கண்டிராத மிகப்பெரிய சாம்ராஜ்யம் இவனது ஆணைக்குக் கட்டுப்பட்டுக்கிடந்தது. சரித்திரத்தின் முகத்தில் ஒரு பயங்கரச் சின்னத்தைப் பொறித்துவிட்டு உயிர் துறந்தான்.

இவனது வாழ்வு முடிந்துவிட்டதைக்கண்டு உலகம் நிம்மதியோடு மூச்சுவிட்ட போதிலும் நூற்ருண்டுக் காலமாக இவனதுபெயர் மக்கள் உள்ளத்தில் கிலியை உண்டுபண்ணிவந்தது.

பசுபிக் சமுத்திரக் கரையிலிருந்து கருங்கடல் ஈருகவுள்ள நாடுகளையெல்லாம் இருபத்தைந்து வருடகாலம் இவன் நிர்மூலமாக்கிவந்தான் இவனது பயங்கரப்படை செல்லுமிடமெல்லாம் வர்ணிக்கமுடியாத அளவுக்கு அழிவு

இவனுல் மனித வர்க்கம் நிர்மூலமாக்கப்பட்டது. அழகான கட்டிடங்கள் தரைமட்டமாக்கப்பட்டன; பச்சைப் பசேலென்று இருந்த வயல்களும் பழவர்க்கங்களைத் தரும் தோப்புக்களும் வனுந்திரங்களாக்கப்பட்டன. பாம்புகள் போல் பாணங்கள் பறந்து வந்து குடியானவர்களின் உயிரைக் குடித்தன. இடுப்பிலிருந்த குழந்தைகள் மீது கூட அவை இரக்கங் காட்டவில்லை. இவனுல் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை பலகோடிகளாகும்.

இவனுல் அழிக்கப்பட்ட நாடுகளில் மிகக் கொடுமையாகவும், கடினமாகவும் தாக்கப்பட்ட நாடு ஈரான். அதன் சனத்தொகையில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் மிருகத்தனமாகக் கொல்லப்பட்டார்கள்.

இவன் புரிந்த அட்டூழியங்களும் அழிவுகளும் இரண்டாவது உலக மகா யுத்ததோடு ஒப்பிடக்கூடியவை.

இத்தகைய மிருகத்தனமான செயல்களைப் புரிந்த செங்கிஸ்கான் தனது வீரமும் தானடைந்த வெற்றிகளும் சரித்திரத்தில் இடம்பெற வேண்டுமென்று விரும்பியிருகிருன். இவன் தன்காலத்தில் சரித்திர ஆசிரியர்களையும் ஓவியர்களையும் நியமித்து அவர்களைக் கண்ணியமாகவும் அன்பாகவும் நடத்தி வந்திருக்கிருன்.

இவனது பாரசீக சரித்திராசிரியரான ஜுவாய்னி எழுதிய "உலகை வெற்றிகொண்டவர்களின் சரித்திரம்" என்ற நூல் செங்கிஸ்கானின் பயங்கரப் போர்களையும் அவன் தனது பரந்தசாம்ராஜ்யத்தை எப்படி ஆண்டான் என்பதையும் விபரிக்கிறது.

உங்களுக்குச் சேவை செய்ய வருகிறது!
நவீன தயாரிப்பாக
'மில்க்வைற் சோப்'
புதிய கவர்ச்சிகரமான மேலுறையுடன்




# தீக்கோழியின் இறகு ருத். விலை ரூபா 1500

மனிதர்களில் மட்டுமல்ல பறவைகளில் கூட மனைவிமாருக்குப் பயந்தவைகள் இருக்கின்றன. உலகிலேயே மிகப் பலம் வாய்ந்த பறவை தீப்பறவை. இது தனது காலால் உதைத்து ஒரு மனிதனைக் கொன்றுவிடும். இதன் மேல் மனிதர்கள் ஏறிச் சவாரி செய்வதும் உண்டு. பேடுகளைக் காட்டிலும் சாவல்களே மிகப் பயங்கரமானவை.

ஆயினும்—

பெண்பறவைகள் முட்டையிடுமுன், அவைகள் முட்டையிட்டு, அடைகாத்துக் குஞ்சு பொரிப்பதற்கு வசதியான இடத்தை ஆண்பறவையே தேர்ந்தெடுக்கிறது. பின் பெண்பறவையின் நிர்வாகத்தில் பொருட்களை மறைத்துக்கொளும்படி கோருகிருர்கள்.

கைக்கடிகாரம், தங்கச் சங்கிலி, மோதிரம், வைர நகைகள், எதையாவது தீப்பறவைகள் கண்டுவிட்டால் எப்படியும் பிடுங்கி எடுத்து 'லபக்' என்று விழுங்கிவிடும்.

தென்னுபிரிக்க வனுந்தரப் பகுதியில் சுதந்திரமாகத் திரிந்த ஒரு தீபறவையின் வயிற்றினுள் இருபது விலை உயர்ந்த வைரக்கற்கள் இருந்தன. ஒரு மிருகக் காட்சிச்சாலையில் சமீபத்தில் இறந்த ஒரு பறவையின் வயிற்றுக்குள் நாலுருத்தல் எடையுள்ள நாணயங்கள் இருந்தன·

வைரக்கற்கள் நிறைந்துள்ள பிரதேசங்களில் இப்பறவை

## வைரங்களை விழுங்கும் வனுந்தரப்பறவை

ஆண்பறவை கூடு அமைக்கிறது. பெண் முட்டையிட்டதும் முதல் ஐந்து நாட்களும் ஆண்பறவையே அடைகாக்கிறது. அதன்பின் பெண் பறவை பகலிலும் ஆண்பறவை இரவிலும் மாறி மாறி அடைகாக்கின்றன. இவ்விதம் 42 நாட்கள் அடைகாத்த பின்பே குஞ்சுகள் பொரிக்கின்றன.

தென் ஆபிரிக்காவிலுள்ள தீக்கோழிப் பண்ணைகளை யாராவது பார்க்கச் சென்ருல் அங்குள்ள அதிகாரிகள் பார்வையாளர்களை அணுகி அவர்களிடமுள்ள மினுங்கும் கள் சுதந்திரமாகத் திரிவதால் இப்பறவைகள் அனைத்தும் அரசாங்கத்துக்குச் சொந்தமானவை என்றும் பொதுமக்கள் அவற்றை வேட்டையாடக் கூடாதென்றும் தென் ஆபிரிக்க அரசாங்கம் பிரகடனப்படுத்தியிருக்கிறது.

இப்பறவையின் தடித்த தோல், சப்பாத்து, பெல்டுகள் தோல்பை, புத்தக உறை ஆகியவை செய்வதற்கு உபயோகிக்கப்படுகிறது. இவற்றின் இறக்கைகள் ஒரு ருத்தல் 110 பவுண்வரை (சுமார் 1500 ரூபா) விலை போகின்றன. ஒரு இறகு சுமார் 30 ஷில்லிங் பெறுமானமுள்ளதாகும்.

குதூகலமும் பரிசுத்தமும்
கலந்த உணர்ச்சி தருகிறது!--

சுவேந்திரா
சந்தன சோப்

பி. சி. சி. கம்பனியாரின் தயாரிப்பு

பாதாம் எண்ணை (Almond Oil) சேர்ந்தது.

யாழ்ப்பாண விற்பனையாளர்:
முகமத்தலி அப்துல்அலி
5-7, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# சுவையான செய்திகள்

## பெண்களைப்பற்றி அக்பரின் அனுபவம்

ஒரு ஆடவன் பல பெண்களை மணந்துகொள்வதற்கு இஸ்லாமிய மதச்சட்டம் இடமளிக்கிறது. அக்பர் பாதுஷா பல அழகிகளைத் தம் அந்தப்புரத்தில் மனைவிகளாக வைத்திருந்தார், அவர்களில் பல நாடுகளைச் சேர்ந்த அழகிகள் இருந்தார்கள் அனுபவ ரீதியாகத் தாம் கண்ட உண்மைகளை அக்பர் விபரிக்கும்பொழுது "ஒவ்வொருத்தனும் நான்கு மனைவிகளைக் கல்யாணம் செய்து கொள்ளலாம். பிள்ளைப் பெறுவதற்கு இந்தியப் பெண்களும், காதல் களிப்போடு கொஞ்சிக் குலாவப் பாரசீகப் பெண்களும் வீட்டு வேலைகளை ஒழுங்காகச் செய்வதற்கு ஆப்கானியப் பெண்களும்; இத்தனை பேரையும் அடக்கி ஆள்வதற்கு துருக்கிப் பெண்களும் சிறந்தவர்கள்" என்று கூறுகிருர்,

பிள்ளைப் பெறுவதற்கு இந்தியப் பெண்கள்தான் சிறந்தவர்களாம்! இலங்கையின் தேயிலைத் தோட்டப் பகுதிகளில் வாழும் பெண்கள் அதிகமாக இந்திய வழித் தோன்றல்களாகவே இருக்கிருர்கள். கடந்த வாரம் புதினத்தில் இதேபகுதியில், தோட்டப்பகுதிகளில் வாழும் பெண்கள் 'பிள்ளைப் பெறும் யந்திரங்கள் என்று வர்ணித்து இலங்கை சுவீடன் குடும்பதிட்டச் சங்கத்தினர் வெளியிட்ட அபிப்பிராயம் பிரசுரிக்கப்பட்டிருந்ததை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள்!

## சிறுவன் பாம்பை கடித்தான்!

"நாய் மனிதனைக் கடித்தால் அது செய்தியல்ல; மனிதன் நாயைக் கடித்தால் அதுதான் செய்தி" என்பது பத்திரிகை உலகத்தின் பழமொழி. இதேபோல் ஒரு குழந்தை பாம்பைக் கடித்த செய்தியொன்று கிடைத்திருக்கிறது!

தென்னிந்தியாவில் மன்ஞர்குடிக்கு அருகிலுள்ள கீழத்திருப்பாலக்குடி என்னுமிடத்தில் தெருவில் ஒரு குழந்தை விளையாடிக்கொண்டிருந்தான். அப்பொழுது அந்தக் குழந்தைக்கு அருகில் ஓடிவந்தது, ஒருபாம்புஅதைக்கையால் பிடித்த சிறுவன், பாம்பின் தலையை வாயில் வைத்துக் கடித்தான்!

விபரம் தெரியாத சிறுகுழந்தையான அவனுக்கு இரண்டு பற்கள்தான் முளைத்திருந்தன. அந்த இரண்டு பற்களைக்கொண்டுதான் பாம்பின் தலையை பலமாகக் கடித்தான் சிறுவன், அவனுக்கு தான் கடிப்பது பாம்பு என்பதுகூடத் தெரியாது, அத்தனை சிறு குழந்தை அவன்.

சிறுவன் வாயிலிருந்து இரந்தம் வடிந்துகொண்டிருந்தது, பாம்பைக் கையில் பிடித்துக் கடித்துக் கொண்டிருக்கும் சிறுவனின் பெற்ருேர்கள் அலறித்துடித்துக்கொண்டு ஓடிவந்து. பாம்பை அடித்துக்கொன்ருர்கள். குழந்தையைத் தூக்கிக்கொண்டுபோய் டாக்டரிடம் பரிசோதித்தார்கள்,

'குழந்தைக்கு ஆபத்து ஒன்றும் ஏற்படவில்லை. அவன் நல்ல சுகமாகக் இருக்கிருன்' என்று கூறிஞர் டாக்டர்.'

## பதிவிரதைகளுக்கு அஞ்சலி!

கொரியாவிலுள்ள கீயும் என்ற நதியின் ஓரமாக ஒரு பெரிய பாறை இருக்கிறது. இந்தப் பாறையில் ஒரு அதிசயம் நடக்கிறது.

கி. பி. 660ம் ஆண்டு சீனர்கள் கொரியாவின்மீது படையெடுத்து அதைக் கைப்பற்றிக்கொண்டார்கள். அரசனையும் மந்திரிகளையும் சிறைப்படுத்தி சீனுவுக்குக் கொண்டு சென்ருர்கள். சீனர்களிடம் சிக்கி, தங்கள் கற்பைப் பறிகொடுக்க விரும்பாத சீன அரசனின் அந்தப்புர அழகிகள் அத்தனை பேரும் அரண்மனையிலிருந்து தப்பி ஓடிவந்து அந்தப் பெரிய பாறையில் ஏறி, அதிலிருந்து கீழேகுதித்துத் தற்கொலை செய்துகொண்டார்கள். இப்படித் தங்கள் கற்பைக் காப்பாற்றுவதற்காக உயிரைத் தியாகம் செய்த 71 அந்தப்புரப் பெண்களின் நினைவுக்கு நிலையான சின்னமாக ஒருஅதிசயம் இன்னும் நடைபெற்றுவருகிறது!

அந்தப் பாறையின் மேலுள்ள ஒரு மரத்தில் ஒவ்வொரு வருடமும் சரியாக 71 பூக்கள் மட்டுமே பூக்கின்றன, கூடுவதோ, குறைவதோ இல்லை. இந்த மலர்கள் நன்ருக மலர்ந்து மணம் வீசியதும், தாமாகவே கீழே ஓடிக்கொண்டிருக்கும் நதியில் விழுந்துவிடுகின்றன, கடந்த 1300 ஆண்டுகளாகத் தொடர்ந்து இந்தச் சம்பவம் நடைபெற்றுவருகின்றது!

## தைத்த அம்புடன் 11-வருடம் வாழ்ந்தவன்

ஜோஸ் சில்வா என்பவன் பொலீவியா நாட்டிலுள்ள கொச்சாசம்பா என்ற ஊரில் மாடு மேய்ப்பவன். ஒருநாள் அவனுக்கும், ஒரு செவ்விந்தியனுக்கும் ஏதோ தகராறு ஏற்பட்டு விட்டது. அத்தத் தகராறு முற்றிவிடவே, ஆத்திரமடைந்த செவ்விந்தியன் ஒரு அம்பை சில்வாவின் முகத்தில் எய்து விட்டுப் போய்விட்டான். அம்பு சில்வாவின் நெற்றிப்பொட்டில் பாய்ந்து, மூக்குக்கு அருகில் வெளிப்பட்டு நின்றது.

பல மாதங்களுக்குப் பிறகுதான் சில்வா டாக்டரைப் பார்த்தான். அதை எடுக்கும் விதத்தைப் பற்றி டாக்டர் விபரித்துக் கூறியதைக் கேட்ட சில்வாவுக்குப் பயம் வந்துவிட்டது. அம்பு அப்சடியே முகத்தில் இருந்துவிட்டுப் போகட்டும் என்று முடிவு செய்து விட்டான்.

முகத்தில்தைத்த நாலு அடி நீளமுள்ள ஒரு பெரிய அம்புடன் அவன் தெருவில் நடப்பதை எல்லோரும் ஆச்சரியத்துடன் பார்ப்பார்கள். முதலில் சில்வாவுக்கு அது வெட்கமாக இருந்தாலும், நாளடைவில் அவனுக்கு அது பழகிப் போய் விட்டது. அம்பு முகத்தில் குத்திய வண்ணமேயிருக்க, பதிஞெருவருட காலம் அவன் வாழ்ந்து வந்தான்!

அவன் சாகும் தறுவாயில், கடவுள் முன் இப்படிக் கோரமாகக் காட்சியளிக்க விரும்பாததால், தான் இறந்தபிறகு தன் முகத்திலிருந்து அம்பைப் பிடுங்கி விட்டு புதைக்கும்படி கேட்டுக் கொண்டான்!

## தாடிக்குப் பதில் கோழி இறக்கை

யூரியா ஹென்கல், கான்ஸாஸ் என்னும் இடத்தைச் சேர்ந்தவர். ஒரு சமயம் துப்பாக்கிக் குண்டு ஒன்று பாய்ந்து அவருடைய நாடிச் சதையைப் பிய்த்துக்கொண்டு போய்விட்டது. எனவே, அவர் ஒருகோழிக் குஞ்சின் மார்புச் சதையை வெட்டித் தம் நாடியில் ஓட்டிக்கொண்டார் சில தினங்களுக்குப் பிறகு அவருடைய நாடியில் தூவல்—அதாவது கோழி இறகுகள் முளைக்க ஆரம்பித்துவிட்டன,

## பூச்சியின்மீது வழக்கு

'ராமபாணம் என்று தமிழிலும் 'Silver Fish' என்று ஆங்கிலத்திலும் அழைக்கப்படும் ஒருவித சிறு பூச்சியின் மேல் வழக்குத் தொடர்ந்து அதற்குத் தண்டனையும் விதித்த அதிசயமான நிகழ்ச்சியொன்று ஸ்பெயின் தேசத்தில் நடைபெற்றது! பத்தாயிரம் ரூபா பெறுமதியான துணிகளைக் கடித்து நாசப்படுத்திவிட்டதாக ஒரு பூச்சியின்மீது குற்றம் சாட்டி விசாரணை நடத்தினர்கள், முடிவில் அந்தப் பூச்சிக்கு மரண தண்டனை விதித்ததுடன், அதன் வர்க்கத்தையே நாடுகடத்தினர்கள்! இந்தச்சம்பவம் 1540-ம் ஆண்டு நடைபெற்றது.

இந்த விநோதமான வழக்கு மிகவும் அநியாயமானது என்று கூறப்படுகிறது. ஏனென்ருல் மரணதண்டனைக்கு உள்ளான அந்தப் பூச்சி ஒரு நிரபராதி! ஏனென்ருல் அந்தப் பூச்சி துணியைக் கடிக்காதாம், அதனுடைய புளுக்கள்தாள் துணிகளைக்கடிக்கும். உண்மைக் குற்றவாளி பூச்சியல்ல, புழுதான் என்று சிற்றுயிர் வர்க்க ஆராய்ச்சியாளர்கள் கூறுகிருர்கள்.


வெளிவந்துவிட்டது! புதிய பதிப்பு!

**சைவ சமய பாடத்திரட்டு**

**(SAIVAISM)**

**[G. C. E. வகுப்பு இந்து சமய பாடம்]**

எழுதியவர்கள்:
வித்துவான் பொன். முத்துக்குமாரன் பீ. ஓ. எல்., பண்டிதர் பஞ்சாட்சர சர்மா,

பிரபல கல்லூரிகளிலும் இலங்கை எங்குமுள்ள அநேக தமிழ்ப் பாடசாலைகளிலும் உபயோகத்திலிருந்து வரும் ஷி நூலின் புதிய பதிப்பு வெளிவந்து விட்டது!

**இந்நூலின் விசேட சிறப்புக்களாவன:**

பரீட்டைக்குரிய பாடப் பகுதிகள் முழுவதும் சேர்ந்து ஒரே புத்தகமாக அமைந்திருப்பது, பாடல்களுக்கு பதவுரை, பொழிப்புரை, விசேட குறிப்புகள் எழுதியிருப்பது, பரீட்சைக்குத் தேவையான பகுதிகளைப் பிற்பகுதியில் விசேட அனுபந்தங்களாகச் சேர்த்திருப்பது, மாதிரிபயிற்சி விஞக்களும், அவற்றில் முக்கியமானவைகளுக்கு விடைகளும தந்திருப்பது, விளக்கமான முறையில் அட்டவணைகள் சேர்த்திருப்பது.

கடந்தகாலப் பரீட்சைகளின் விஞக்கள் பெரும்பாலும் இந்நூலின் குறிப்புகளுக்கிடையிலேயே அமைந்திருந்ததாகவும், அவற்றை ஏற்கெனவே இந்நூல் மூலமாகப் படித்த தமது மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்தார்களென்றும் பல ஆசிரியர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளார்கள்.

**விலை ரூபா 3-50** (தபாற் செலவு ச. 40)

தொகையாக வாங்குவோருக்கு தகுந்த கழிவு உண்டு.

விற்பனையாளர்கள்:

ஆனந்தா அச்சகம்—புத்தகசாலை,
226, காங்கேசன்துறை வீதி, : : யாழ்ப்பாணம்.

# உங்கள் காலபலன்

## இந்த வாரம் எப்படி?

"ரவி" சோதிடர்

1-4 62 முதல் 7-4-62 வரை

மேடம்: உங்கள் சொந்த விஷயங்களில் உள்ள சிக்கல்கள் சில நீங்கலாம். குடும்பத்திலும் அமைதியான சூழ்நிலை ஏற்படும். நண்பர்களால் உதவியுண்டு. ஆனுல் தேகசுகம் சிறிது பாதிக்கப்படும்.

இடபம்: அதிக பிரயாசத்தின் பின்புதான் கருமங்கள் சித்தியாகும். மனச்சஞ்சலமும் குடும்பச் சச்சரவுகளும் காணப்படு கின்றன. பூமியால் லாபமுண்டு.

மிதுனம்: ஞாயிறு காலையை அவதானமாகக் கழிக்கவும். மிகுதி நாட்களில் தொழில் முன் னேற்றமுண்டு.
புதிய கருமங்களில் வெற்றிகிட்டும். பொருள் விருத்தியுமுண்டு. ஆனுல் ஆறுதலிருக்காது

கடகம்: கருமங்களில் வெற்றியீட்டுவது கஷ்டமாக இருக்கும். தொழில் ஸ்தானத்தில் சங்கடங்கள் காணப்படுகின்றன. குடும்பச் சச்சரவுகளும் உண்டு, ஞாயிறு பிற்பகல் திங்கள் செவ்வாய் வாரங்களை அவதான மாகக் கழிக்கவும்.

சிங்கம்: வாரத்தின் முதலிரண்டு நாட்களில் புதிய கருமங்களில் வெற்றியுண்டு. பொருள் விருத்தியும் கீர்த்தியும் ஏற்படும். செவ்வாய் பிற்பகலையும் புதன்கிழமை,வியாழக்கிழமையையும் அவதானமாகக் கழிக்கவும். மிகுதி இரண்டு நாட்களும் நன்மை பயக்கக் கூடியன.

கன்னி: குடும்பச் சூழ் நிலையில் அபிவிருத்தி காணப்படுகிறது முதலில் தடைகள் ஏற்பட்டாலும் கருமங்களில் வெற்றி கிட்டுவது நிச்சயம். வியாழன் பிற்பகலையும் வெள்ளி சனிவாரங்களையும் அவதானமாகக் கழிக்கவும்.

துலாம்: எதிர்ப்புகளைச்சமாளித்து முன்னேற முடியும்.
தொழிலில் நல்ல லாபம் கிட்டும். இனசனங் களுடன் மட்டும் தொடர்ந்து விரோதம் காணப்படும். குடும்பச் சச்சரவுகளும் உண்டு.

விருச்சிகம்: விவசாயத் தால் லாபம் கிட்டும். அன்னியர் மூலமாக சில உதவியுண்டு. ஆனுல் குடும்பச் சச்சரவு களும் அதிகசெலவும் காணப் படுகின்றன.

தனுசு: இந்தவாரம் பொருள்வரவுண்டு. புதியகருமங்கள் தடைப் பட்டுப் பின்பு நிறைவேறும். தேகசுகம் பாதிக்கப் படும்.

மகரம்: உங்கள் சொந்தவிஷயங்களில் சில சிக்கல் கள் ஏற்படும். கருமங்களில் தீர்மானமான முடிவுக்கு வருவது கஷ்டமாக இருக்கும். ஆனுல் பொருள் விருத்தியுண்டு

கும்பம்: தேக நிலையில் அபிவிருத்தியுண்டு. பொருள் லாபமும் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் சிறு சச்சரவுகள் உண்டாகும். ஆனுல் அவற்றை ஓரளவு சமாளிக்க முடியும்.

மீனம்: போதிய வருவாயிருந்தும் செலவினங்களும் அதிகமாகிக் கெண்டேயிருக்கும் மனதில் அமைதி நிலவாது. தேகசுகமும் பாதிக்கப்படும்.

சோதிடம்

உங்கள் பெயர், பிறந்தவூர், வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ 5-00 போஸ்டல் ஓடர் அனுப்பினுல் உங்கள் ஒரு வருட காலபலன் மிகச் சரியாக எழுதிஅனுப்பப்படும். இந்த விளம்பரத் துண்டைவைத்து அனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூ. 3-00 அனுப்பினுல் போதுமானது.

'ரவி' சோதிடர்,
226, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.

சேலம்
S. V. R. கண்டர் R. I. M. P. அவர்கள் தயாரிக்கும்
வீரிய விர்த்தி மாத்திரை
மிதமிஞ்சிய உஷ்ணத்தினுலும், அமிதபோகத்தினுலும் தாது நீர்த்துப்போகுதல், சொர்ப்பன ஸ்கலிதம் (இந்திரிய ஸ்கலிதம்) தாதுக்குறைவு, நரம்புத் தளர்ச்சி, சக்தி குறைவு, இவைகளை நீக்கி, இந்திரியத்தை கெட்டிப் படுத்தி சர்வநாடி நரம்புகளும், வலுவைக் கொடுக்க வல்ல சிறந்த வீரிய மாத்திரை.
24 மாத்திரைப்புட்டி ரூ. 7-00
லேபனம் மெழுகு
குறி சிறுத்துப் போகுதல், சுருங்கும் தன்மையடைதல். தளர்ச்சியடைதல், உறுதியின்மை ஆகியவைகளுக்கு மேற் பூசும் மெழுகு.
1 அவுன்ஸ் புட்டி ரூபா 5-00
தேவைக்கு எழுதவும்:
கண்ணையா மெடிக்கல் ஸ்டோர்ஸ்
Prop: S. M. R. M. S.
ராகலே பஜார், ஆள்க்கருணை.
(சிலோன்) (P. O.)

# என்னசேதி?

## அருந்ததியர் சங்க ஆண்டு விழா

கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை அருந்ததியார் சங்க 30-வது ஆண்டுவிழாவில் திருவாளர்கள் எம். வி. சுப்பிரமணியம் மு. சிவசிதம்பரம், எம். பி. எஸ் தொண்டமான், சுவாமி சச்சிதானந்தா ஆகிய பிரமுகர்கள் சொற்பொழி வாற்றினுர்கள்.

"ஆரம்ப பாடசாலை முதல் பல்கலைக் கழகம்வரை கல்வி பயிலும் வயதும், தகுதியும் உடையவருக்குத் தேவையான உதவிகளைச் செய்து சமூகத்தின் தற்போதைய கல்வித் தரத்தை உயர்த்த வழி செய்வது" என்னும் தீர்மானமும் மற்றும் ஒன்பது தீர்மானங் களும் விழாவில் நிறைவேற்றப்பட்டன.

## "பழிகாரி தந்த பரிசு"

யாழ்ப்பாணம், புஹிசரவணபவா நாடக மன்றத்தினர் "பழிகாரி தந்தபரிசு" என்ற நாடகத்தை யாழ்நகரில் அரங்கேற்ற விருக்கிருர்கள். திரு. ஏ. எஸ் மணி அவர்களின் நட்டுவாங்கத்தின்கீழ் உருவாகிறது இத்த நாடகம்.

## திருக்குறள் மகாநாடு

இலங்கை தமிழ்மறைக் கழகத்தின் பத்தாவது திருக்குறள் மகாநாடு வேலணை வாலிபர் முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் வேலணையில் நடைபெற விருக்கிறது. மே 18, 19, 20-ம் திகதிகளில் நடைபெறும் இம்மகாநாட்டின்தொடர்பில் திருக்குறள்கட்டுரைப் போட்டியும், திருக்குறள் ஓவியப் போட்டியும் நடத்துவதென மேற்படி சங்கம் முடிவு செய்துள்ளது.

## முத்தமிழ் விழா

பேச்சு, எழுத்து, ஆற்றல் ஒருங்கே அமையப் பெற்ற மட்டக்களப்பு பிரதிநிதி திரு. செ. இராசதுரை அவர்களின் பேச்சுக்களையும், கட்டுரைகளையும் தொகுத்து எழுதப்பட்ட "ஈழம் தந்த செந்தமிழ்ச் செல்வர்" என்னும் நூலின் வெளியீட்டு விழாவை முத்தமிழ் விழாவாகக் கொண்டாட எழுச்சிமிக்க இளைஞர்கள் முன்வந்துள்ளனர். இக்குழுவின் தலைவராக சாவகச்சேரி எம். பி. திரு. நவரத்தினம் நியமிக்கப் பட்டுள்ளார்.

# இத்தால்... சகலரும் அறிவது!

## அழைத்து வாரீர்!

"அன்புமிகு ஐயாவே அடியேன் யானும்
அருள் பொங்கும் கலையேடாம் புதினம் தன்னை
என்றென்றும் படித்து மிக மகிழ்வுகொள்ள
என் முன்னே நடைபயில அழைத்து வாரீர்"

வந்தாறு மூலை — எஸ். கோபாலசிங்கம்.

## அரசாங்கம் கவனிக்குமா?

.........காரைநகரிலுள்ள ஒரு சந்தைக் கடையில் ஆட்டிறைச்சி ருத்தல் ஒன்று மூன்றரை ரூபாய்க்கு விற்கப்படுகிறது. விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் இதைக் கவனிப்பதாய்த் தெரியவில்லை. இது பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

காரைநகர். — க. இந்திரன்

## உத்தியோகமொழி பட்டபாடு!

........யாழ்ப்பாணம் ரெயில் நிலையத்தில் கொழும்பு ரெயிலுக்காகக்காத்து நின்ற இருவரிடையே எப்படியோ பலத்த கைகலப்பு ஏற்பட்டது. ஸ்டேஷனில் கடமையாற்றிக்கொண்டிருந்த இரு பொலீஸ்காரர்கள் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு விரைந்து வந்தனர். சண்டைபோட்ட இருவரும் தங்கள் தங்கள் கட்சியை ஆங்கிலத்தில் 'பொரிந்து' தள்ளினர். ஆங்கிலமோ, தமிழோ தெரியாத பொலீஸார் எதையெதையோ சிங்களத்தில் கேட்டனர். சண்டை போட்டவர்களுக்குச் சிங்களம் தெரியாது. அவர்கள் விழித்துக்கொண்டு நின்றனர், அங்கு நின்றவர்களிடம் பொலிஸார் சென்று 'யாருக்காவது சிங்களம் தெரியுமா?! என்று விசாரித்தனர் இதற்கிடையில் சண்டைபோட்டவர்கள் இருவரும் தாங்கள் சமாதானம் செய்து கொண்டதாக பொலீஸ்காரர்களிடம் சைகை மூலம் காட்டிவிட்டு மெல்ல நழுவினர்.

நெடுந்தீவு, — செ. மகேந்திரன்.

## ஒரே அபத்தம்!

சென்ற வாரத்து பரிசுக் கேள்வியும், அதன் பதிலும் ஒரே அபத்தம். தமிழரசுத் தலைவர்களிலேயே நேர்மை, நியாயம், தீரம், தியாகம், திறமைமிக்கவர் டாக்டர் நாகநாதன். அவரில் போய் 'முட்டும்' உம்மிடம் இனப்பற்றையோ, மொழிப்பற்றையோ எப்படி எதிர்பார்ப்பது?............

நல்லூர். — க. குகநேசராசா

## ஊதிக்கெடுத்த சங்கு!

...அதிர் வெடிபோடும் அசோகரே! அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தை மூன்ருகக் கூறு போடுபவர் நீரா? அல்லது அதுதான் உண்மையா? சும்மா இருந்த சங்கை ஊதிக்கெடுத்தான் பண்டாரி! என்ற பழமொழி உமக்கும் தெரியுமென்று நினைக்கிரும்.

கொழும்பு. — சி. சின்னத்தம்பி. வே, நாகலிங்கம். க. ஆறுமுகம்

## ஆட்டிப்படைக்கும் காகம்!

.........பாராட்டுரும், உங்கள் உண்மையை வெளியிடும் தன்மையையும், தைரியத்தையும். அரசாங்கத்தை ஆட்டிப் படைப்பவரைக் காகமாகவும், அவருக்கு வக்கலாத்து வாங்கி வலையில் வீழ்த்தப்பார்ப்பவரை நரியாகவும் உவமித்த 'மாலா'வின் கேலிச்சித்திரம் அபாரம்.........

கொழும்பு — எஸ். பி. மொஹமெட்

## புதிய திருப்பம்.!

.........சென்ற சில வாரங்களில் 'புதினத்'தில் புதியதோர் திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. தலையங்கங்கள் அத்தனையும் அபாரம். இந்த நிலை என்றும் இறங்காதிருக்க வேண்டும் என்று பிராத்திக்கிறேன் ......


செங்கலடி — சோ. சுப்பிரமணியம்

கவர்ச்சிகரமான புளக்குகள்
செய்வதற்கு சிறந்த இடம்
SRI LANKA BLOCK MAKERS
131, MESSENGER STREET,
COLOMBO.

## சிரித்துப்பாருங்கள்

தயாரிப்பு: 'மாலா'

கண்ணால் காணவிட்டால்...... வானொலி நடிகர்கள்





ரஷ்யத் தலைவர் ஒருவர் சிறைச்சாலைப் பக்கமாகப் போனார். உள்ளேயிருந்த காவலாளிகள் ஓடிவந்து யன்னலூடாகப் பார்த்தார்கள் ஒருவன்மட்டும் பார்க்க வராமல் தன்னுடைய இடத்திலேயே இருந்தான்.

'ஏய் இந்த நாட்டின் பிரபல தலைவர் போகிறாரடா! நீ பார்க்கவில்லையா?" என்று ஒருவன் கூப்பிட்டான்.

"...ம்...அவர்தானே? இன்னும் கொஞ்ச நாள்போனால் அவர் இங்கே உள்ளுக்கு வந்துவிடுவார்! அப்போது தாராளமாகப் பார்த்துக்கொள்ளலாம்! என்று பதில் கிடைத்தது!

கூட்டத்தில் ஒருவர்: ஆயிரம் ரூபா நோட்டுகளுடன் என்னுடைய மனிபர்ஸ் ஒன்று இந்தக் கூட்டத்துள் விழுந்துவிட்டது. கண்டு எடுத்துத் தருபவர்களுக்கு நூறு ரூபா இனாம் தருவேன்,

ஒருகுரல்: அதை என்னிடம் தந்தால் இருநூறு ரூபா தருவேன்!




ஸ்ரீமான் சித்தம்பலம் (3) கால் 'விஷன்'



நீதிபதி: (குற்றவாளியைப்பார்த்து) நீ இந்தக்கோட்டுக்கு அடிக்கடி வருகிறாய். இனிமேல் வந்தால் கடுந்தண்டனை விதிப்பேன்.

குற்றவாளி: உங்களைப் போன்ற பெரிய மனிதர்கள் தினமும் வருகிற இடத்துக்கு நான் இடைக்கிடையாவது வரக்கூடாதா பிரபு?

# 'நாத்திகம்' பத்திரிகைமீது 18 வழக்குகள்

## சென்னை அரசாங்கம் தொடர்ந்துள்ளது!

## '3 அஞ்சலட்டை எழுதுங்கள்!'

—ஆசிரியரின் வேண்டுகோள்

சென்னையில் வெளியாகும் 'நாத்திகம்' என்ற பத்திரிகை மீது மேலும் நாலு வழக்குகளைத் தாக்கல் செய்திருக்கிறது சென்னை அரசாங்கம். இதன்மீது ஏற்கெனவே பதினாலு வழக்குகள் தொடரப்பட்டு அவை இப்போது விசாரணையில் இருக்கின்றன. ஆகக்கூடி இப்பத்திருகை மீதுள்ள வழக்குகளின் எண்ணிக்கை இப்பொழுது பதினெட்டாக உயர்ந்து விட்டது.

"பத்திரிகையின் கொள்கை பிழையானதாகவோ சரியானதாகவோ இருக்கலாம்: ஆனால் எழுத்துரிமை, பேச்சுரிமை கௌரவிக்கப்படும் ஒரு ஜனநாயக நாட்டில் இத்தகையநடவடிக்கை சரியானதுதானா? என்பதுதான் பிரச்சினை.

இது அநியாயம்! நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய எத்தனையோ 'மஞ்சள்' பத்திரிகைகள் தமிழ் நாட்டில் வெளியாகின்றன. அவைகளைப்பற்றி ஒன்றும் அறியாதது போல் பாசாங்கு செய்யும் சென்னை அரசினர் 'நாத்திக'த்தின் மீது பதினெட்டுமுறை பாய்ந்துவிட்டார்கள், என்றால் அதற்குத் தனிப்பட்ட காரணம் எதுவோ இருக்கத்தானே வேண்டும்?

சட்டம் மனிதனால், மனிதனுக்காக ஆக்கப்பட்டது எந்தப் பக்கத்துக்கும் புரட்டக் கூடியவிதமாக அதன் மீது 'ஓட்டைகள்' (Loopholes) இருக்கின்றன. இந்த 'ஓட்டை'களைத் தமக்குச் சாதகமாகக் கொண்டு அரசாங்கம். வெறும் கடதாசிச் செலவோடு—தன்பலப் பரீட்சையை ஆரம்பிக்கலாம். ஆனால் 'நாத்திகத்தின் விஷயம் கடதாசிச் செலவோடுமட்டும் நின்று விடுவதில்லையே!"

மேற்படி கருத்துத் தொனிக்கும் வகையில் தலையங்கம் எழுதியுள்ள 'நாத்திகம்', தமது வாசகர்களிடமிருந்து ஒரு புதுமுறைப் போராட்டத்தை எதிர் பார்க்கிறது. அதாவது ஒவ்வொரு வாசகனும் மூன்று அஞ்சல் அட்டைகளை வாங்கி, அரசாங்கத்தின் நடவடிக்கையைக் கண்டித்து எழுதி, ஒன்றை முதல் அமைச்சருக்கும், மற்றதை உள்நாட்டிலாக்கா காரியதரிசிக்கும், அடுத்ததைத் தமக்கும் அனுபிவைக்கும்படி கேட்டிருக்கிறது.

நாத்திகம் ஆத்திகத்தை எதிர்க்கிறது. அதனால் பெரும்பான்மை ஆத்திகர்கள் நாத்திகர்கள் மேல்சவாரி செய்ய முயலலாமா? 'ஆம் என்றால் ஜனநாயகம்எங்கேஇருக்கிறது?


உங்கள் துணிகள்

வெண்மையாகவும்

பிரகாசமாகவும் விளங்க

**யாழ் சோப்**

உபயோகியுங்கள்.

**யாழ் சோப்**

தரத்தில் சிறந்தது. அதற்கு நீங்கள் கொடுக்கும் பணத்துக்கு பல மடங்கு லாபம் கிடைக்கிறது.

'யாழ் சோப்' பாவனையாளர்களுக்கு சிறப்பு பரிசுகளும் கிடைக்கும். விபரங்களை எதிர்பாருங்கள்!

Registered as a newspaper at the G. P. O.

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...


'புதினம்'
அடுத்த வார இதழில்

'மாலதி' எழுதும்
"காதல் ஒழுங்கை"
(சிறுகதை)

★ ஒரு பந்தளவு உதட்டுச் சாயத்தை விழுங்கிய சரோஜாதேவி

★ 123 தடவை திருமணம் செய்த 'காதல் மன்னன்!'

பட்டு உடைகள் தண்ணீரில் போடாது
சலவை செய்வதும் சாயம் போடுவதும்



Sunlight Dyers &
DRY CLEANERS
Bus Stand View, JAFFNA

சன்லைற் டையேர்ஸ் & றைக்கிளீனேர்ஸ்
(பஸ்நிலைய முன்பாக) பெரியகடை.
யாழ்ப்பாணம். போன்: 474

"தெற்கையும் வடக்கையும் சமநிலைப்படுத்தும் வகையில் மந்திரி சபை அமைக்கப்படும்"

–நேரு



# தி. மு. க. வெற்றியின் எதிரொலி!

## நேருவின் மனம் மாறியிருக்கிறது!

"மந்திரிகள் அனைவரும் வட இந்தியாவைச் சேர்ந்தவர்களாக இருக்கக் கூடாது. அப்படி இருப்பது முற்றிலும் தவறு. கண்டிப்பாக அது தவருகத்தான் தோன்றும்: அவ்விதம் மந்திரிசபை பெரும்பாலும் வட இந்தியர்களைக் கொண்டதாகவே அமையுமானல் தென் இந்தியாவின் கருத்து நமக்கு தெரியாமல் போய்விடும்" என்று கூறிய இந்தியப் பிரதமர் நேரு தெற்கையும் வடக்கையும் சமநிலைப்படுத்தும் வகையில் மந்திரிசபை அமைக்கப்படும், என்று உறுதியளித்தார்.

எதிர் பார்த்த அளவுக்கு அதிகமாக தி.மு. கழகத்தினர் இம்முறைத்தேர்தலில் ஈட்டிய அமோக வெற்றியைக் கண்டே நேரு இவ்விதம் அறிவித்திருக்கிருர் என்பது அரசியல் அவதானிகளின் கருத்தாகும். இதிலிருந்து இன்ெனுரு விஷயமும் புலனுகிறது. இது வரை காலமும் தெற்கு— தெரிந்தோ, தெரியாமலோ— புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது, அது தவறு என்பதை தீர்க்கதரிசியும், மாபெரும் அரசியல் ஞானியுமான நேரு பதினைந்து வருடங்களுக்குப் பின்புதான் கண்டுபிடித்திருக்கிருர்.

நேருவின் இந்தக் கண்டுபிடிப்பு தி. மு. கழகத்தினருக்கு மட்டுமல்ல, 'பலமான ஒரு எதிர்க்கட்சி வேண்டும்' என்று தொடர்து வலியுறுத்தி வரும் ராஜாஜிக்கும் கூட ஒரு வெற்றியாகும்.

"தி. மு, கழகத்தினரின் வளர்ச்சிகண்டு கிலிபிடித்துப் போயிருந்த தமிழ் நாட்டுக் காங்கிரஸ் வாதிகளுக்கும் இப்பொழுது யோகமடித்திருக்கிறது. வழக்கத்தை விடக் கூடுதலான மந்திரிபதவிகள் கிட்டுமல்லவா?" என்று தி. மு க. செய்தித்தாள் ஒன்று கேலி செய்திருக்கிறது.

சப்பாத்து, செருப்பு, தொப்பி
முதலிய அலங்காரமும் உபயோகமுமான பொருட்கள்
★ நாகரிகமான கூந்தல் முடிகள்
★ சாய்ப்புச் சாமான்கள்
★ பரிசளிக்கத் தகுந்த கவர்ச்சிப் பொருட்கள் வாங்குவதற்கு
யாழ்ப்பாணத்தில்
சிறந்தஇடம்
நியாயமான விலைகள்



தி பேமஸ் ஸ்ரோர்ஸ்
10, 17, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

'அமுதம்'
ஆண்டுவிழா
பிரபல தென்னிந்திய
திரைப்பட நடிகர் நடிகைகள்
சமுகந்தருகிருர்கள்.
விபரங்களை விரைவில் எதிர்பாருங்கள்.

'அமுதம்'
ஆண்டுவிழாப் பரிசுப்போட்டி
முதற்பரிசு ரூபா 1000-00
இதுபற்றிய முழு விபரங்களையும் இப்பத்திரிகையின் அடுத்த இதழின் இதேபக்கத்தில் பாருங்கள்.

'அமுதம்'
131: நியூன் ஹாம் ஸ்குயர், கொழும்பு-13



மின்னும் வைரங்களுக்கும்
உயரிய நகைகளுக்கும்
கே. என். மீருன் சாஹிப்
தங்கப் பவுன் நகைமாளிகை
கன்னுதிட்டி. யாழ்ப்பாணம். போன்: 585

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலை தி. ச, வரதராசன்.
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348, தந்தி; அச்சகம்.